சினிமா உலகம்

4 அணா

விரைவில் வெளிவருகிறது!



தமிழ்ப் பண்பின் முதல் படம்

திரைக்குப் புது முறை

★

மஹாலிங்கம் அஞ்சலி தேவி

பெருமாள்	ரஜினி
கேசவன்	ஜயகௌரி
சக்ரபாணி	சரஸ்வதி
சுப்பையா	ராஜகாந்தம்
காளி ரத்னம்	
ஏழுமலை	
மாதவன்	
சிந்தாமணி	நடிப்பது

ஆதித்தன் கனவு

நடனம்:

லலிதா-பத்மினி

தாரா சௌத்ரி

டைரக்ஷன்:

டி.ஆர்.சுந்தரம் பி.ஏ.,பி.எஸ்ஸி (லீட்ஸ்)

பாடல்கள்:

பாபநாசம் சிவன், ராஜகோபால ஐயர்

சங்கீதம்:

ஜி. ராமநாதன்

விவரங்களுக்கு

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்.

T v7 406

சினிமா உலகம்

ஆசிரியர்: பி.எஸ்.செட்டியார்

படம் 14 சென்னை 31—10—48 விசேஷ இதழ் காட்சி 7.

விடிவு காண.....

யுத்தகால பணப்பெருக்கத்தால் நெடுகிலும் ஒலித்த பணத்தின் 'கண, கண' நாதம் ஓய்ந்துவிட்டது. 'ரொம்ப டல்', 'சுத்த (Dry)' என்ற பஞ்சப் பாட்டுகள் பலதிசைகளிலிருந்தும் எழுந்து எதிரொலிக்கத் தொடங்கிவிட்டன. எங்கு பார்த்தாலும் ஒருவித மந்தம் நிலவ ஆரம்பித்துவிட்டது.

படிப்படியாகப் படத்தொழிலிலும் படர்ந்த இந்த நிலைமை இப்பொழுது நெருக்கடி கட்டத்தை நெருங்கிவிட்டது. முன்னுளில் வருஷம் ஒன்றிற்குச் சுமார் ஐம்பது படங்கள் வரை தயாராகி வெளிவந்தது பொய்யோ, பழங்கதையோ என்றிருக்கிறது. இவ்வருஷத்தில் வந்த படங்கள் மிகவும் குறைவுதான். அவற்றிலும் மூன்றே மூன்று தான் குறிப்பிடத்தக்க வெற்றிகளாய், ஓரளவு பெருமைப்படத்தக்கனவாய் விளங்கின. பிரமாதமாக ஓடும் என எதிர்பார்க்கப்பட்ட பெரிய படங்கள் மண்ணைக் கவ்வின. தகல்பாஜிகளின் பேச்சை நம்பி இத்தொழிலில் புகுந்த அநேகரில் படப்பிடிப்பு ஆரம்பமாவதற்கு முன்பே 'ஐ.பி'களானவர் சிலர், பாதிப் படம் எடுத்தபின்பு பாப்பர்களானவர்சிலர், முக்கால்வாசி எடுத்து,முடிக்க வகையின்றி அல்லாடுபவர் அநேகர், நடுவழியில் ஞானேதயம் பெற்று உடும்பு வேண்டாம் கை வந்ததே பெரிது என்று போனவர்கள் சிலர் முடித்து தியேட்டர்களுக்கு வர லாயக்கில்லாத படங்களை டப்பாக்களில் வைத்துக் கொண்டு ஒப்பாரி வைப்பவர் சிலர், என்று பலவிதமாகக் காட்சியளிக்கின்றனர். தொழிலில் உள்ள பழம் பெருச்சாளிகளின் குல்மால்த்தனங்களால் அவஸ்தைக்குள்ளாகி அவதிப்படுபவர்களும் இருக்கின்றனர். தடபுடலான விளம்பரங்களுடன் ஆரம்பமான கம்பெனிகள் சிலவற்றிற்கு விளம்பரம்போட்ட பணம் வசூலிக்கப்போனுல் அவை இருந்த சுவடே தெரியவில்லை, ஆசாமிகளின் அட்ரஸ் அகப்படுவதில்லை. இந்த நிலை நல்லதா, இப்படி ஏற்படுவானேன், இதே கதையில் போனுல விமோசனம ஏற்படுவது எப்படி என்றெல்லாம் சிந்தித்து வழிகாண வேண்டிய அவசியம் தொழிலின் எதிர்கால நலன் கருதுபவர்களுக்கு ஏறபட்டிருக்கிறது. கையில் காசிருக்கிறது என்ற ஒரே யோக்கிய தாம்சத்துடன், தெரியாத தொழிலில், எத்தர்கள் வலையிற்சிக்கி, இறங்கி ஆரவார ஆடம்பரச் செலவு செய்தது, படங்களை ஜில்லாவாரியாக, துண்டுப் பிரதேச ரீதியாகப் போட்டியிட்டு வாங்கி நஷ்டமடைந்தது, ஊதாரித்தனமாக கண்டபடி நட்சத்திர நடிகர்கள் என்று உலவும் ஜந்துக்

அன்பர்களுக்கு நமது தீபாவளி வாழ்த்துக்கள்

களுக்குப் பணத்தை வாரி வழங்கி பட உற்பத்திச் செலவு உயரச் செய்தது ஆகியவை எல்லாம் படத்தொழில் க்ஷீணிக்கக் காரணங்கள். பிரபலப் படங்கள் எனக் கருதி, போட்டி போட்டு, உரிமை பெற்றவை கையைக் கடித்துவிடவே பணமூட்டைகளின் கவனம் தியேட்டர்கள் நிர்மாணிக்கும் திசையில் திரும்பியிருப்பதாகத் தெரிகிறது, புதுப்படங்கள் வெளிவரத் தயக்கம் ஏற்படும் சமயத்தில் இரண்டு மூன்று புதுத்தியேட்டர்களைச் சிறு ஊர்களில் கட்டி என்ன பயன்?

எல்லாவற்றையும் தீரயோசித்து, செலவினங்களைக் குறைத்து, புதிய நடிகர்களைக் கொண்டு, தகுந்த சமூகக் கதைகளைப் பொறுக்கி, தக்க நபர்களின் உதவியைப் பெற்று படமாக்கப் பலர் முன் வந்தால் தான் எதிர்காலப் படத்தொழில் வளம் பெறமுடியும். இல்லையெனில் குறிப்பிட்ட ஒருசில படவுலக பாதுஷாக்கள் வசம் சிக்கி, தொழில் க்ஷீணித்து, 'உறக்கம் சாக்காடு' ஆக மாறிய கதையில் முடியும்.

விடிவு காண இருட்டோடு இருட்டாகவே கண்விழித்தெழுந்து உஷாராக வேண்டுகிறோம்.

★

எம். யு. ஏ. வியின் 'கீத காந்தி'யில்
பி. எஸ். சரோஜா

தீபாவளி | புதிய ஜவுளிக்கடை | வாழ்த்துகள்

★

கண்ணைக்கவரும்—எண்ணற்ற

பட்டு & நூல்
ஜவுளி தினுசுகள்

ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம்

★

252
ராஜ வீதி

V. K. & BRO.

கோயமுத்தூர்

முடியுந்தறுவாயில் இருக்கிறது

காஞ்சனா அற்புதத் திறமையுடன்

நடிக்கும்

சந்திரவங்கா

(பிரசித்தமான கிராமியக் கதை)

ஸ்ரீ பத்மா பிக்சர்ஸ் தயாரிப்பு

மற்றும் என். ஏ. ராவ், அத்தங்கி, சூரிபாவு, வங்காரா, ராமமூர்த்தி, கிருஷ்ணம ராஜு, கங்கரத்னம், கோடிரத்னம், கமலாதேவி, கங்கணம்

ஆகியோர் நடிப்பது.

டைரக்ஷன்:	கதை, வசனம், பாடல்கள்:	டைரக்ஷன் மேற்பார்வை:
காட்டூர் மோஹன்	**கோப்பள்ளி ரமணாராவ்**	**ஜிதன் பானர்ஜி**
காமிரா:	ரிகார்டிங்:	ஸ்டூடியோ:
ஆர். ஆர். சந்தர்	**மீனாக்ஷி**	**நியூடோன்**

— விவரங்களுக்கு —

SRI PADMANABHA PICTURES

6/54, BALAKRISHNA ROAD, MYLAPORE, MADRAS-4.

சொ. மு. சிந்திக்கிறார்!

மனித வர்க்கம் அறிவு வளர்ச்சியின் ஆரம்பப் படியில் இன்னும் பூரணமாகக் கால் எடுத்து வைக்கவில்லை.

கிறிஸ்து பிறந்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பிருந்த பண்பு தான், உயிர்க்குலத்திற்காக அவர் மரணமடைந்த பின்னரும் நிலவியது. இன்றும் அதுவே போல் எத்தனையோ பேர் மனிதகுல அறியாமையின் சந்நிதியில் காவு கொடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது கூட பலியிடப்பட்டு வருகிறார்கள்.

தனக்குத் திருப்தியளிக்கும் செயலையே செய்ய வேண்டும் என்று குருட்டுத்தனமாக முரண்டு பிடிக்கும் குழந்தையின் பண்பு தான் மனிதவர்க்கத்தில் வேரோடியிருக்கிறது.

சிருஷ்டி காலம் முதல் யுகயுகாந்தரங்களாக மனித ஜந்துக்கள் பிறந்து, வாழ்ந்து, செத்து வருகின்றன. என்றாலும், மனிதனாக வாழும் வகைமுழுவதும் தெரியவில்லை. அறிவு வளர்ச்சி சர்வ வியாபகமாகவில்லை. அறிவு கௌரவிக்கப்படுவதில்லை.

அறிவுக்கு இருட்டடிப்பு—இது தான் மனித குலம் பூஜிக்கிற மந்திரம். முன்னேற விரும்புகிறவர்கள் கையாள்கிற தந்திரம்.

●

மனிதன் சிந்திக்கத் தெரிந்த பிராணி என்பது சரி. ஆனால் மனிதர்கள் எல்லோரும் சிந்திப்பதில்லை. சிந்திக்கத் தெரிந்தவர்கள் கொஞ்சப் பேர் தான். சிந்திப்பவர்கள் குறைவு. சரியாகச் சிந்திப்பவர்கள் மிகமிகக் குறைவு.

கால வெள்ளத்தில் வாழ்க்கைச் சுழிப்பிலே சிக்கி அல்லாடுகிற—சிந்திக்க முடியாத—எண்ணற்றவர்களுக்காக சிந்திப்பவர்கள் அறிஞர்கள், தலைவர்கள், பத்திரிகாசிரியர்கள் என்று சொல்லப்படுகிறது. மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுகிறார்களாம் இவர்கள்!

அறிஞர்கள், அரசியல்வாதிகள், தலைவர்கள், பத்திரிகைப் பெரியார்கள் முதலியவர்கள் மனிதகுலம் உய்வதற்காக— மனித வர்க்கத்திற்கு வழிகாட்டுவான் வேண்டி— சிந்திக்கிறார்கள் என்பதை விட, சிந்திக்கத் தெரியாத மனிதர்களின் பெயரைச் சொல்லி, அவர்களைப் பயன்படுத்தி, தாங்கள் வெளிச்சம் போட்டு வாழ்வது பற்றியே சிந்திக்கிறார்கள் என்று சொல்வது தான் ஏற்கும்!

மக்கள் விழிப்புறாமலிருக்க வேண்டும் என்று தான் நினைக்கிறார்கள் இன்னோரன்னவர்கள்,

காரணம்—குருடர்கள் கூட்டத்திலே ஒண்ணரைக் கண்ணன் சர்வாதிகாரி!

மக்கள் விழிப்புற்று, தம் நிலை உணர்ந்து, சரியாகச் சிந்திக்க முயலும் போது இன்றைய எத்தர்களின் சாயம் வெளுத்து விடும். இதை அவர்கள் எப்படி ஆதரிக்க முடியும்?

●

சரியாகச் சிந்திக்கிற ஒருசில தலைவர்கள், அறிஞர்கள்கூட, கட்சி தலைமைப் பதவி முதலியவைகளை பூஜிப்பதனால் மக்களின் உணர்ச்சியைத் தூண்டி வெறியூட்டி

'ஆதித்தன் கன'வில் குமாரி சரஸ்வதி

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

தயாராகி வருகிறது

பி. யு. சின்னப்பா	பி. கண்ணும்பா
யோக - மங்களம்	பி. எஸ். சரோஜா
டி. எஸ். பாலையா	பி. பி. ரெங்காச்சாரி

மற்றும் பலர் நடிக்கும்

ராயல்

சுதர்சன்

...தமிழ்...

டைரக்ஷன்: சுந்தர்ராவ் நட்கர்னி

வசனம்: இளங்கோவன்

பாடல்கள்: பாபநாசம் சிவன்

ஸ்டூடியோ: சென்ட்ரல்: கோவை

எமது படங்கள் திரைக்குத் தயார்

ஹரிதாஸ்
சாவித்திரி
சகுந்தலை
சக்குபாய்
சிந்தாமணி
பாமாபரிணயம்

★

விநியோகம்:

ஜூபிடர் பிக்சர்ஸாரின்

உன்னதப் படங்கள்

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை உள்பட

ராயல் டாக்கி டிஸ்டிரிப்யூட்டர்ஸ்

மதுரை, பெஜவாடா, பெங்களூர்

அவர்களைத் தவறான பாதையில் திருப்புவதற்கே தங்கள் சிந்தனையைச் செலவழிக்கிறார்கள்.

சிந்திக்கக் கூடிய சிலர் கட்சி, சில கொள்கைகள், சில தனிமனிதர்களிடம் அர்த்தமற்ற பக்தி கொண்டு, சரியாகச் சிந்திக்க மறுக்கிறார்கள். மறுப்பதுடன், கண்ணைக் கட்டிக் கொண்டு தாங்கள் போகிறபோக்கு தான் சரியானது, தங்களையே மற்றவர்களும் பின்பற்ற வேணும் என்று சாதிக்கிறார்கள்.

தப்பும் தவறுமே சரியானவை என்று திரும்பத் திரும்பச் சொன்னால், திறமையாகப் பிரசாரம் செய்தால், அவை தான் சரியானவை; பிற கோளாறானவை என்ற எண்ணத்தை நிலைநிறுத்திவிடலாம் என்பது யாவரும் அறிந்ததே.

சரியானபடி சிந்திக்க விடாமல் வேறு வழியில் மக்களின் எண்ணத்தை மாற்றுகிறவர்களும், சரியானபடி சிந்திக்க மறுக்கிறவர்களும், தங்கள் சிந்தனை தவறானது என உணர்ந்தும் கூட கட்சி, கட்டுப்பாடு, பதவிப் பெருமை இவைகளுக்காக தவறையே உபாசிக்கிறவர்களும் காலப்போக்கில் சரியானபடி சிந்திக்கும் திறனையே இழந்து விடுகிறார்கள்.

இவர்களை வழிகாட்டிகளாகக் கொள்கிற சமுதாயம் எப்படி உருப்படும்?

●

அறிவின் வளர்ச்சிப் பாதையிலே அழைத்துச் செல்லப்படாத மக்கள் அறியாமையை விழுந்து கும்பிடுவதில் வியப்பே இல்லை.

அறியாமையை வளர்க்கிறவர்கள் அறிவுக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் துணிவதிலும் வியப்பில்லையன்றோ! அறிவின்—சிந்தனையின்—சிருஷ்டிகள் மக்களுக்குப் புரியாது என்று சொல்லிச் சொல்லி, நல்ல கசப்பு ஏற்படுத்தி விடுகிறார்கள்.

இவற்றாலெல்லாம், சலசலப்புக்காரர்கள் பிரமாதமாக வாழ்ந்து புகழ்பெற முடிகிறது. எண்ணற்றவர்களின் 'பலாபலா'க்களையும் 'வாரே வா'க்களையும், 'சபாஷ்'களையும், கரகோஷங்களையும், பூமாலை உபசாரப்பத்திரங்களையும் பெற முடிகிறது.

இந்த ஆரவாரிப்பிடையே, உண்மை, நேர்மை, திறமை, சிந்தனை யெல்லாம் நசுக்கப்பட்டு விடுகின்றன.

●

உண்மைக்கும் திறமைக்கும் நேரிய சிந்தனைக்கும் சரியான வரவேற்பு இல்லை என்பதனால் இவையெல்லாம் செல்லாக்காசுகள்—கோளாறானவை—என்றாகி விடா.

இவற்றை வளர்க்கிறவர்கள் அப்பாவிகளாக, வாழத் தெரியாதவர்களாக, புகழ் பெற லாயக்கற்றவர்களாக கருதப்பட்டால், அது அவர்கள் குறையல்ல. இந்த உயரிய பண்பை உணர முடியாத மக்களின் தவறேயாகும்.

மனிதர்கள் அறிவு விஷயத்தில் இன்னும் குழந்தைப் பிராயத்திலேயே இருப்பதால், சகல துறைகளிலும் சிறுபிள்ளைத்தனமாகவே நடந்து கொள்கிறார்கள்......சினிமாப் பார்க்கிறவர்களில் பெரும்பலர் கலைக்காகவோ கருத்துக்காகவோ பிறநயங்களுக்காகவோ பாராமல் 'சும்மா பொம்மை பார்க்கும்' அரிப்பினால் பார்ப்பது போல......புதிய புத்தகங்கள், பத்திரிகைகள் வந்தவுடன் அவசரமும் ஆவலும் உந்தப் படங்களை மட்டுமே பார்த்து ரசிப்பதில் ஈடுபடுவது போல!

(தெலுங்கு) 'சந்திரவங்கா'வில் ஹாஸ்யக் காட்சி

அபத்தங்களும் விரசங்களும் நிறைந்த சினிமாப்படம் மக்களைக் கவர்கிறது, அதைப் பார்க்க கும்பல் கூடுகிறது. கலைநயம் மிக்க சிருஷ்டிக்கு வரவேற்பு இருப்பதில்லை.

தென்னாட்டின் கலை வாழ்வு

கா. அப்பாதுரை, எம். ஏ.

தமிழகம் பல துறைகளிலும் மிக விரைவாக முன்னேறி வருகிறது. தமிழரே அறியாத அளவு முன்னேறுகிறது என்று கூடக் கூறலாம். பலகாலமாக பல காரணங்களால் அமுக்கப்பட்டுக் கிடந்த தமிழகத்தின் உள்ளாற்றல் படிப்படியாக வெளிப்பட்டு வளர்ச்சிக்குத் தூண்டுதல் தருகின்றது, வளர்ச்சியின் கருநிலையறிந்து தக்க உரமிட்டு வளர்த்தால் தமிழகம் உலகில் மதிப்புக்குரிய ஓரிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் தமிழர் செய்யவேண்டும் ஆக்கமுயற்சிகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவது தமிழகத்தின் வாழ்வு நலியத் தொடங்குமுன் இருந்த—நலிவுற்றும் வெளித் தோன்றுமல் மறைந்தும் இருக்கும் பண்புகளை அறிந்து அவற்றை உயிர்ப்பித்தல் வேண்டும்.

இரண்டாவதாக, தமிழகம் எவ்வளவு விரைவாக முன்னேறினுலும் தமிழகத்தை அடுத்துள்ள பிறதென்னுட்டுப் பகுதிகளும் பிறநாடுகளும் இன்னும் விரைவாகப் பல துறைகளில் முன்னேறுகின்றன என்பதை மறுக்க முடியாது. தமிழறிஞர் அவற்றை ஊன்றிக் கவனித்து ஆவனகொண்டு தமிழகத்தை வளப்படுத்த வேண்டும், இவ்வகையில் சிறப்பாகத் தென்னுட்டில் பிற பகுதிகளையும் மேனுடுகளையும் கூறவேண்டும். தென்னுட்டின் பிறபகுதிகளில் தமிழகத்தில் நலிவுற்ற சில துறைகள் நலிந்தொழியாதும் வளர்ந்தும் வருகின்றன. மேனுடுகளில் அறிவியல், பொறியியல் துறைகளில் எட்டிப் பிடிக்கமுடியாத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மூன்றுவதாகத் தமிழர் தம் தனித்தன்மை (Individuality) யையும் புதுமையையும் (Originality) வளர்க்கவேண்டும். வெளிநாடுகள் வழிகாட்டியாகவும் தூண்டுதலாகவும் இருக்க முடியுமேயன்றி வேறல்ல. அவற்றைப் பின்பற்றி மட்டும் செல்வதால் உண்மை வளர்ச்சியும் ஏறிடாது. தேசிய மதிப்பும் அதனுல் பெருகாது.

கலைத்துறையில் தமிழர் மறைந்த பண்பாடுகள்—இன்று பலர் மறந்திருக்கும் பண்பாடுகள் பல. கிராம வாழ்வும் உழவும் எளிய வாழ்வுமே கீழ் நாட்டுக்குரிய பண்பாடுகள் என்று பலரால் இலேசாகக் கூறப்பட்டு வருகிறது. இதனைப்போற்றுதலாகக் கொள்பவரும் உண்டு; புறக்கணிப்பாகக்கொள்பவரும் உண்டு, ஆனுல் சங்க இலக்கியத்தை ஒரு சிறிது புரட்டினுலும் கூடத் தமிழர் நகர வாழ்விலும் வாணிக, கைத்தொழில் வளர்ச்சியிலும், கடற்படை, கல்வி ஆகியவற்றிலும் ஆட்சி முறையிலும் உயர்வாழ்க்கைத்தரத் திறம் மேம்பட்டிருந்தனர் என்று காணலாம். நறுமணப்பொடி (Face Powder) வண்ணக் குழம்புகள் (Paints & lip sticks) நல்லாடை துணிமணிகள் ஆகியவற்றில் சங்ககாலத் தமிழன் அறிந்த வகைகள் தொகைகள் இன்றைய அமெரிக்க மேனுட்டினரையும் நாணச் செய்யும். திட்டமிட்ட நகரமைப்பு முறை மொகெஞ்ச தாரோ காலத்திலிருந்து அண்மை வரை தமிழர் மரபாயுள்ளது. கிராம வாழ்க்கையில் கவிஞர் அமைதியைக் காணலாம். உழவில் ஒழுக்க நூலார் உயர்வு காணலாம், ஆயினும் கலைகள், அறிவியல்கள் பெருகுவது நகர்களிலேயே. தமிழர் நாகரிகம் மருதநிலப்பேரூர்களிலும் நெய்தல் நிலப் பட்டினங்களிலும் வளர்ந்ததேயாகும்.

மனித நாகரிகம் குறிஞ்சி (மலை) நிலத்தில் தோன்றி, முல்லையில் (காட்டில்) படர்ந்து மருதம், நெய்தல் (ஆற்றுப்பாங்கு கடற்கரை)களில் முதிர்ந்தது. உலகில் ஏனைய மக்கள் குறிஞ்சியளவில் முல்லையளவில் அண்மைவரை நின்றனர். தமிழர் பல்லாயிர ஆண்டுக்கு முன்பே மருத, நெய்தல் நாகரிகம் அடைந்திருந்தனர். துறைமுக

நகர்களுக்குப் பட்டினம் என அவர்கள் பெயரிட்டது ஒன்றே இதனைக் காட்டும்.

2000 ஆண்டுகட்குமுன் இயல், இசை, நாடகம் என முத்திறம் வளர்த்த நாடு தமிழகம் ஒன்றே. அவற்றைக் கட்டமைத்துப் பேணக் கழகம் அமைத்த பண்பு வேறு எந்நாட்டிலும் இல்லை. ஆயினும் இடையில் (ஆரிய புராணக்காலத்தில்) இசை நலிந்துவிட்டது. நாடகம் நடைபெற்ற தடத்தையே காணோம், சிலப்பதிகார நூல், அதன் உரை ஆகியவற்றிலிருந்து பண்டை வளங்களை மட்டும் அறிகிறோம்,

பா, பாவினம் என்று தமிழில் இருவகைப் பாட்டுக்கள் இருந்தன. இவற்றுள் பாக்களுக்கு மட்டுமே இயல் துறை இலக்கணம் உண்டு. அதிலும் வஞ்சி கலிப்பாவுக்கு விளக்கமான இலக்கணமில்லை. இவையும் பாவினங்களும் இசையை பெரிதும் சார்ந்தவை. இப்பாவினங்களும் நாடகமும் இன்று மலையாள நாட்டில் எப்படியோ இறவாது நிற்பதுடன், நாடக மரபு புது வளர்ச்சி பெற்று உலகப் புகழ் கண்டுள்ளது. ஆனல் சிலப்பதிகாரமே ஒரு நாடகம் என்றும் மலையாளிகளின் சாக்கையர் கூத்தாக அது நடிக்கப்படவே அமைந்ததென்றும் தமிழர் அறியாதிருக்கின்றனர். மலையாளத்தின் நாட்டுப் பாடல்களும் நாடகமும் தமிழறிஞரால் சிலப்பதிகாரமுன் மாதிரியுடன் தழுவியாக்கப்படுமானல், தமிழகம் மேம்படுவதுடன் அவற்ருல் மலையாள நாட்டிற்கும் புத்தாக்கம் ஏற்படும்.

காந்தா போட்டோ ஸ்டுடியோ

சவுக், தெப்பக்குளம் போஸ்டு

திருச்சிராப்பள்ளி

●

உங்களுடைய இயற்கையான அழகைக்
கண்டு ஆனந்த மடைய
எங்கள்

போட்டோ ஸ்டூடியோவிற்கு

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

●

எல்லாவிதமான போட்டோக்களும், என்லார்ஜ் மெண்டுகளும் மிகவும் நேர்த்தியாகவும், குறித்த காலத்திலும் செய்து தரப்படும்.

புரோப்ரைட்டர்:
K. P. கோவிந்தராஜ்

தென்னடு, வடநாடு ஆகியவற்றின் கலைகளையும், கிரேக்க நாடு, மேலை நாடு ஆகியவற்றின் கலைப் பண்புகளையும் கண்டுணர்ந்து தமிழர் தமிழின் எதிர்கால வளர்ச்சியில் முனையவேண்டும். அரசியல் காரணமாக ஏதோ ஒரு இந்திய மொழியையும் ஏதோ ஒரு மேனுட்டு மொழியையும் கற்பதுடன் தமிழா அமையாமல் பரந்த மொழியறிவுடன் உலகக்கலை, உலக அறிவு ஆகியவற்றுடன் இணையும்படி பல திற மொழிகளும் பயிலுதல் வேண்டும்,

தென்னடும் சரி, வடநாடும் சரி, நெடுங்காலமாக பாரத இராமாயண புராணங்களிலும் வாழ்க்கைத் தொடர்பற்ற கலைச் சுவையற்ற கண்கட்டிக் கற்பனைகளிலும் உழல்கின்றன. வடமொழி இலக்கியங்கள் பெரும்பாலும் இவ்வடிமை பண்பிலேயே நின்றுள்ளன, தமிழர்களுக்கு இலங்கையில் சங்க இலக்கியமும் மேனுட்டிலக்கியமும் நல்ல வழிகாட்டிகளாகும். ஆனல் இவற்றைக்கூடக் குருட்டுத்தனமாகப் பின்பற்ற வேண்டுவதில்லை. அவற்றின் அடிப்படையில் புத்துரு ஆக்கலே சால்புடையது,

நாடகத்தைவிடப் படக் காட்சி, பேசும் படம் உயிர்ப்பண்பு நிறைந்தது. ஆயினும் நாடகத் துறையைவிட இது நிலையான பயனுடையது. மக்கள் அறிவு வளர்ச்சி, கல்வி ஆகியவற்றுக்கு அதனை ஒத்த நல்ல கருவி வேறில்லை. ஆனல் அதில் கலைப் பண்பு இன்னும் ஏற்படவில்லை. வாழ்க்கைத் தொடர்போ மருந்துக்குமில்லை. புராணப் படங்கள் புராணங்களைக்கூடக் கெடுத்துவிடத் தக்கவையாயுள்ளன. அண்மையில் இவ்வகையில் தனிப்பட்ட ஒரு சிலர் முயற்சியால் முன்னேற்றம் ஏற்பட்டு பட்டினத்தார், சிட்டாடல் ஞானசௌந்தரி முதலிய படங்கள் தோன்றியுள்ளனவாயினும் வாணிகக் கலைஞரும், போலிச் சமயவாதிகளும் கலையுலகில் இன்னும் ஆதிக்கம்விட்டபாடில்லை. பாரதி பாடல்போல தமிழிலக்கியத்தின்

29-10-48 முதல் பிராட்வே & கெயிட்டியில்

பெண்ணாசையிலும் பொன்னாசையிலும் முழுகி அழிந்து நின்ற ஒரு பாமரன்
பிரும்மஞானத்தை அடைந்த அற்புதத்தைக் காட்டும் உன்னத சித்திரம்

திரைப்படத்தில் ஒரு காவியம்! பார்க்கத் தவறாதீர்கள்

வாஹினியாரின்

யோகி வேமனா

நாகய்யா நடித்தது

மற்றும்

எம். வி. ராஜம்மா
லிங்கமூர்த்தி
முதலியோர்

டைரக்ஷன்;
கே. வி. ரெட்டி
B.Sc. (Hons)

ஸ்டுடியோ;
நியூடோன்

தினசரி 3 காக்ஷிகள்
2-30, 6-30, 9-30 மணிக்கு

சென்னை உரிமை:

ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ், 83, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10.

பாடல்கள் உணர்ச்சியுடன் புதுமெட்டுக் களோடிணைந்து கலையில் இடம் பெற வேண்டும். பழமையே புதுமைக்கு உரம் என்னும் உண்மையை தமிழர் மறக்கவிடக் கூடாது.

என். எஸ். கேயின் 'கிந்தனுர்' நாடகக் களத்தில் ஒரு புதுத்துறை. இதுபோன்ற புதுத் துறைகளை மக்கள் ஆதரிக்கவேண்டும். கலைப் பண்பை மறந்து வேறு சில வசதிகளையும் சோம்பல் வாழ்வையும் எண்ணி மக்கள் தவருன படங்களை ஆதரிக்காதவாறு கலைஞர், அறிஞர் அவர்கட்கு வழி காட்டவேண்டும்.

முத்தமிழும் முறையாக விரவிய நாடகம், படக்காட்சி தமிழகத்துக்கு மறுமலர்ச்சியும் உலகுக்குப் புதுமையும் தரும்.

கலைத் துறையில் கூடிய மட்டும் தனித் தமிழ் பேணலின் இன்றியமையாமை இன்று நன்கு உணரப்படவில்லை. தமிழ் இன்று சற்று நலிந்திருப்பினும் உலகின் மற்றெல்லா மொழிகளையும்விட நுட்பமான சிறப்புகள், வளர்ச்சி வித்துக்கள் அதிகம் உள்ளூர உண்டு. மொழியிலும் தேசியம் பேணித் தேசியத் தமிழாகிய தனித் தமிழ் வளர்த்தால் தமிழகத்தில் இன்று கனவில்கூடக் காண முடியாத புது வளர்ச்சி ஏற்படுவது உறுதி.

●

அட்டைப் படம்

மாடர்ன் தியேட்டர்ஸின் 'ஆதித்தன் கன'வில் நடிக்கும் அஞ்சலிதேவி

ஒடிந்த வீணை

'காளிதாஸன்'

ஓட்டையாம் உடலம் ஒடிந்த வீணை
கேட்டை யடைந்த கிறுக்கு நரம்புகள்,
பொத்தலாய்ப் புழையாய்ச் சொத்தையும் கொஞ்சம்
பலகால் மீட்டிப் பாழ்செய் கருவி
காமம் கோபம் கழிபடு குணங்களின்
தீமையாம் தீயில் கருகிய தீமை
ஆயினும் வேறெதை அர்ப்பணம் செய்வேன்,
தேவியிச் சிறியேன் சிதைந்த வீணையை
ஏற்க மாட்டாயோ ஏழையேன் என் செய்வேன்
என்று நான் கவலும் காலையில் ஏற்ருள்
தேன்விரல் மீட் டித் தேனிசை பொழிந்தாள்
உடலம் தடித்தது, நரம்புகள் ஓங்கின
பொத்தல் நெஞ்சத்துப் புதுமைகள் பூத்தன
காமமும் கோபமும் கழிந்தன உண்மைக்
கவிதை மலர்ந்தது கற்பனை மிகுந்தது
என்றும் புதிதாய் எல்லையில்லாததாய்
ஊற்றும் பண்ணிசை உலகெல்லாம் பரந்து
வாழ்க்கை வெறுமையில் வளங்கள் கொழிக்கும்
பட்டவை தழைக்கப் பாழுக் குயிர் வரக்
கல்லும் புல்லும் கனிந்து கொண்டாட
உலகம் வாழ்ந்தது ஒவ்வோர் அணுவும்
ஓமென ஒலித்துன் நாமம் புகழும்
தேவீ எந்தன் சிறுமை தீர்த்தாய்
பாவியேன் ஏதுநான் பதிலுக் களிப்பேன்

போலிகள்! ஜாக்ரதை!!

மாயவரம் R. S. கிருஷ்ணு
ஒரிஜினல் ரிஜிஸ்டர்
தென்னமரக்குடி எண்ணெய் என்ற விலாசத்தை பார்த்து வாங்கவும்.

தேவை

இல்லாத இடங்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

எழுதுக:
மானேஜர்,
சினிமா உலகம்
80, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு
மவுண்டு ரோடு,
மதராஸ்-2.

பாசவலை

தி. க. சி.

சுந்தரம் பத்திரிகை ஆபீஸ் வேலையை விட்டதிலிருந்து அவருக்கு அமைதியே இல்லை. உள்ளத்திலும், உள்வீட்டிலும் சதா குழப்பம் தான்.

மாசம் நிரந்தரமாகக் கிடைத்து வந்த நூற்றிருபது ரூபாயைத் தொலைத்துவிட்டு' வேலையில்லாம லிருப்பது பற்றி ஜானகிக்கு மிகுந்த வருத்தம்.

தினப் பத்திரிகையில் தந்திச் செய்திகளை மொழி பெயர்த்து தனது இலக்கியத் திறமையை வீணுக்கிக் கொள்வதை விட சுயேச்சையாய் எழுதிப் பிழைப்பதே சிறந்தது என்ற முடிவில் தான் சுந்தரம் வேலையை விட்டார். சுந்தரத்துக்கு சம்பளம் பெரிதல்ல; சுதந்திரம் பெரிது என்ற நினைப்பு. மேலும் மாதத்துக்கு பதினைந்து நாள் இரவு வேலை. இது தான் அவருக்குப் பெரிய உபத்திரவமாக யிருந்தது. ஆகவே தனக்கு முழுவதும் பகல் வேலை வேண்டும் என்று மானேஜ்மெண்டோடு மோதிப் பார்த்தார், நடக்கவில்லை. அதைச் சாக்காக வைத்துக் கொண்டு, சுயேச்சையாக எழுதிப் பிழைக்க முடியும் என்ற வைராக்கியத்துடன் வெளியேறினுர். ஆனுல் இக்கரைக்கு அக்கரை பச்சையாகத் தானிருந்தது! கடந்தஇரண்டு மாசத்திலும் கடன் வளர்ந்ததே தவிர காசு சேர வில்லை.

பத்திரிகாலயத்து மிஷின் வாழ்க்கையோடு சுயேச்சை எழுத்தாளன் என்கிற அநாதிப் பிழைப்பை ஒப்பு நோக்கி சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும்போதுதான் ஜானகி சந்தர்ப்பம் தெரியாமல் குறுக்கே விழுந்தாள்.

'அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதே பார்த்தீர்களா?'

'இல்லை. என்ன எழுதியிருக்கு?'—அசுவாரசியமான பதில்.

'தீபாவளிக்கு நம்மிருவரையும் வந்து போகச் சொல்லி யிருக்கிருர்கள். இங்கிருந்து கஷ்டப்படுவதை விட அங்கே போய் ரெண்டு மாசம் இருப்போமே?'

'இங்கிருப்பது கஷ்டம்!...ஓஹோ சரி தான்! இராதா, பிறந்த வீட்டில் பணத்திலே புரண்ட பிள்ளை!' என்று கிண்டலாகச் சொல்லுதிர்த்தார்.

'ஆமா, உங்களுக்கென்ன? விடிஞ்சதும் நீங்க பாட்டுக்கு வெளியே போய் விடுவீர்கள். வீட்டு வாடகைக்காரன் வந்து மிரட்டிவிட்டுப் போகிருன்; அரிசியில்லை; எண்ணெயில்லை...' என்று தன் கைவச மிருக்கும் அஸ்திரங்களைத் தொடுத்தாள் ஜானகி.

புகைந்து கொண்டிருந்த அவர் உள்ளம் பொங்கியது. 'இங்கே அரிசியில்லா விட்டால் உங்க அப்பன் வீட்டிலே போய் திங்கனுமாக்கும்? நாளை காலையிலே டிக்கட் எடுத்துக் கொடுத்து உன்னை ரயிலேற்றி விடுகிறேன். ஊர் போய்ச் சேர்! நீ ஏன் கஷ்டப் படனும்? நான்தான்...' என்று கத்தினுர்.

ஜானகி இதை எதிர் பார்க்க வில்லை. சுந்தரமும் கலியாணமான இந்த இரண்டு வருஷத்தில் இப்படிப் பேசியதுமில்லை. ஜானகி வெவெலத்துப்போனுள். கண்ணீர் வடித்த படி, 'என்னை மன்னியுங்கள்' என்று அலறி அவர் கால்களில் விழுந்து விட்டாள்.

இரவு முழுவதும் ஜானகி அழுதாள்; சுந்தரமும் உறங்கவில்லை. இருவரும் ஒரே படுக்கையில் படுத் திருந்தாலும் ஒருவர் அனல் மூச்சு மற்றவரைத் தகித்துக் கொண்டிருந்தது.

இரவு நகர்ந்து சென்றது. விடிந்தது. சுந்தரம் பத்திரிகையுடன் உறவாடுவதில் முனைந்தார். அவர் கையில் பத்திரிகை யிருந்ததே தவிர கண் ஒரு எழுத்தையும் படிக்கவில்லை. நேற்றிரவு நிகழ்ச்சியில் தான் நினைவு வட்ட மிட்டது. நடந்ததை எண்ணவும் தன் மீதே வெறுப்பு பிறந்தது அவருக்கு. 'சை! ஏன் தான் எனக்கு இவ்வளவு கோபம் வருகிறதோ? என் ஜானகியை நேற்றிரவு நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. பாவம். ஜானகி வெகுளி...

'என்ன? குளித்துச் சாப்பிட நேரம் காணுதா? எனக்கு வயிறு பசிக்கிறது' என்று அழைத்தாள் ஜானகி. அவள் குரலில் பழைய கல கலப்பு இல்லை; அவள்

முகத்தில் மலர்ச்சி யில்லை என்று தோன்றியது. 'பாவம், அவள் என்ன செய்வாள்? என்னிடம் பணம் இல்லை. என்னுல் சம்பாதிக்க முடியவில்லை என்ருல் அவளிடம் கோபத்தைக் காட்டினுல்?' என்ற எண்ணம் வளர்ந்தது.

ஜானகி 'என்ன, வருகிறீர்களா?' என்று மீண்டும் கூப்பிடவும், 'இதோ வந்துட்டேனே!' என்று சிரித்துக் கொண்டே எழுந்தார் சுந்தரம்.

சாப்பிட்ட பின், வெற்றிலை போடும் போது 'இன்று எப்படியாவது கையில் பணமில்லாமல் வீடு திரும்புவதில்லை' என்று சபதம் பூண்டார். இந்த வைராக்யத்தோடு மேஜையைத் திறந்து எழுதி வைத்தது ஏதாவது அச் சேராமல் இருக்கிறதா என்று பார்க்கும் போது பாதி எழுதிய நாவல் ஒன்று தான் கைவசம் இருந்தது!

'இதை வைத்துக் கொண்டு என்ன பண்ணுவது? எவன் பாதி நாவலுக்கு பணம் கொடுக்கப் போகிருன்? இருந்தாலும் பார்பபோம்' என்று மனசைக் கெட்டியாக்கிக் கொண்டார்.

ஸ்டார் போட்டோ

ஸ்டூடியோ, திருச்சி

தேரடிக் கடைத் தெரு :: திருச்சி

●

உயர்தர போட்டோக்கள் நவீன முறையில் குறித்த காலத்தில் தயாரித்துக் கொடுக்கப்படும்.

●

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

PRO. K. P. VARATHARAJ

'ஜானகி! நான் பெருச்சாளி பிரசுராலயம் வரை போய் வருகிறேன்; யாரேனும் தேடி வந்தால் சொல்லு. கதவைச் சாத்திக்கோ' என குரல் கொடுத்துவிட்டு, கையிலிருந்த புகையிலையை வாயில் போட்டு ஒதுக்கிக் கொண்டு வெளியே கிளம்பினுர் சுயேச்சை எழுத்தாளர்.

2

'நமஸ்காரம்'

'வாங்கோ ஸார்! வாங்கோ' என்று தனது பருமனுன உடம்பை நாற்காலியிலிருந்து முழுதும் உயர்த்த முடியாமல், கைகளை மட்டும் கூப்பிக் கொண்டே சுந்தரத்தை வரவேற்ருர் பெருச்சாளி முதலாளி பெரிய திருவடியா பிள்ளை.

'அடே, பையா! இரண்டு காபி' என்று பையனை அனுப்பிவிட்டு, 'என்ன விஷயம்? சௌக்கியந்தானே? ரொம்ப நாளா இந்தப் பக்கம் வரவே யில்லையே!' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே தன் பக்கமிருந்த வெற்றிலைச் செல்லத்தை இந்தப் பக்கம் நகர்த்தி விட்டு வேலையில் முனைந்தார் ஸ்ரீமான் பிள்ளை.

பிள்ளையின் வழக்கமான கேள்விகளை கவனியாமல் சாவதான்மாக வெற்றிலை போட்டுக் கொண்டே 'என்ன புரூப் திருத்தியாகுதா?' என்ருர் சுந்தரம்.

'ஆமாம்; மல்லிகா இருக்கிரு பாருங்கோ அவளுடைய சிறு கதைகள். இது தான் கடைசிப் பாரம். தீபாவளி யன்று ரிலீஸ் பண்ணலா மென்றிருக்கிறேன். சுவையான காதல் கதைகள்.'—

'ஓஹோ' என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய் 'இவளுடைய கதையைப் புஸ்தகம் போடுருனே' என்ற கசப்பு மூள, வெற்றிலை குதப்பலோடு அந்தக் கசப்பையும் சேர்த்து வெளியே 'புளிச்' என்று துப்பினுர். பின்னர் மேஜையிலிருந்த டம்ளர் ஜலத்தை எடுத்து வாயை உரசிக் கொப்பளித்துவிட்டு வந்து உட்கார்ந்தார் சுந்தரம்.

'இந்தாருங்கோ காபி'

'இதோ சிகரட்'

காபியைப் பருகி விட்டு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

ஆசாமியைக் குளிப்பாட்டி விட்டோம் என்ற நினைப்பில் மெதுவாக தன் நிலையை வெளி யிட்டார் பெரிய திருவடி.

'ஸார், சுந்தரம்! இந்த புஸ்தகத்து ஒரு அருமையான முகவுரை எழுதிக் கொடுங்களேன்; உங்கள் முகவுரை என்ருல் புஸ்தகத்துக்கு ஒரு தனி கிராக்கி ஏற்படும்.

'வாஸ்தவம் தான்; ஆனுல் பாத்திர மறிந்து பிச்சை யிடு என்று சொல்லி யிருக்கிறதே!'

சுந்தரத்தின் நையாண்டி பெரிய திருவடியைக் குத்தி வாங்கியது. என்ருலும் 'நாலு பக்கம் முகவுரை கொடுங்கள். நூறு ரூபாய் தருகிறேன்' என்று ஆசை காட்டினுர் அவர்.

'நாலு பக்க மென்ன? எட்டுப் பக்கம் வேணுமென்ருலும் எழுதுகிறேன். ஆனுல் எங்கெந்த பாஷையிலிருந்தெல்லாம் அவள் கதைகளைத் திருடி யிருக்கிருள் என்று எழுதுவேன். சம்மதமா?'

'என்ன திருடி யிருக்கிருளா?'

'பின்னே? எத்தனை கதைகளை உங்களுக்கு ஆதாரத்தோடு காட்ட வேண்டும்? என் கதை ஒன்றைக் கூட அபேஸ் பண்ணியிருக்காளே அவள்!' பெரிய திருவடி கல்லாய் சமைந்து விட்டார்.

'நீங்களே ஒரு முகவுரையை எழுதி விடுங்களேன்' என்று மேலும் ஒரு குத்துக் குத்தினுர் சுந்தரம்,

'ஸார், ஸார்! இப்ப என்ன பண்றது? பாதிப் பணம் கூட கொடுத்து விட்டேனே?'

:பொம்பிளை அல்லவா...?' என்று மனசில் நினைத்துக் கொண்டே 'செய்கிறதென்ன? இனிமேல் ஜாக்கிரதையா யிருக்கோணும். அவ்வளவுதான். மேலும் நீங்கள் இக் காலத்திலே சிறு கதைகளைப் பிரசுரிப்பது நல்லதல்ல; நாவல்களைப் பிரசுரியுங்கள்; லாபமுண்டு' என்ற யோசனையையும் சொல்லிக் கொடுத்தார்.

திருவடியா பிள்ளை தலையை ஆட்டினுர். 'நானும் அப்படித் தான் பிளான் பண்ணிக்கிட்டுயிருக்கேன், ஆனுல் இது வரை நல்ல நாவலாக ஒன்றும் வரவில்லை. துப்பறியும் கதைகளும் அதுவும்இதுவுமாய் வந்துகொண் டிருக்கின்றன. நல்லதாக எது வந்தாலும் பிரிசுரிக்கலாம்.'

'இந்தாருங்கள். உங்கள் பணத்திற்கும் வாசகர்களின் காசிற்கும் நல்லதாக என்னிடம் ஒன்று இருக்கிறது. பார்க்கிறீர்களா?' என்று தமது சரக்கை அவரிடம் நீட்டினுர் சுந்தரம்.

எழுத்துப் பிரதியைப் புரட்டிப் பார்த்து விட்டு, 'என்னங்க! நாவல் பத்தாவதுஅத்தியாயத்தோடு நிற்கிறதே! பாக்கி?' என்று வாயைப் பிளந்து கொண்டு கேட்டார் திருவடி.

'பாக்கி பிறகு எழுதனும், இப்போது கொஞ்சம் பணமுடை ரொம்ப அவசரம். அதற்காகத்தான் அரைகுறையாக உங்களிடம் ஓடிவந்தேன், படித்துப் பாருங்களேன் என்று வெற்றிலைக் காம்பைக் கிள்ளினுர் சுந்தரம்.

'உங்கள் நாவலுக்குக் கேட்கணுமா? முதல் அத்தியாயமே பிரமாதமாயிருக்கே! நீங்கள் கதையை முடித்துக்கொண்டு வாருங்கள். கண்டிப்பாய் பிரசுரிக்கிறேன்'

'அது சரி. இரண்டே நாளில் முடித்து விடுகிறேன். இப்போது கொஞ்சம் பணம் தேவை. ஒரு இருநூறு இருந்தால் கொடுங்கள். பிரதி இங்கிருக்கட்டும்.'

இருநூறு என்றதும் நாலுநாளாய் க்ஷவரம் பண்ணுத தாடியை நெருடிக்

கும்பகோணம்

E. S. மைதீன் & கோ.

E.S. MYDEEN & CO
இ.எஸ்.மைதீன்
TRADE MARK
KUMBAKONAM

ரிஜிஸ்டர் நெ. 7479

புகையிலை பொட்டலங்கள்

உயர்தர புகையிலைகளைக் கொண்டு சிறந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன

காலணு, அரையணு, ஒரு அணு, இரண்டணு பொட்டலங்களாகக் கிடைக்கும்.

கொண்டு, 'இவனை நம்பலாமா? அவளைப் போல் இவனும் ஏமாற்றிவிட்டால்?' என்ற யோசனையில் ஆழ்ந்தார் ஸ்ரீமான் பிள்ளை.

'நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம். நான் மல்லிகா அல்ல' என்று அவர் மன ஓட்டத்தை எடை போட்டமாதிரி பேசினார் சுந்தரம். அந்தக் குத்தலைத் தாங்க மாட்டாமல் தத்தளித்தார் பிள்ளை.

'அது சரி, உங்களை நம்பாவிட்டால் வேறு யாரைத்தான் நம்புவது? காண்டிராக்ட் எப்படி எழுதுவது என்றுதான் யோசிக்கிறேன்' என்றார் தந்திரமாக. சுந்தரம் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டால் நாவலையும் குறைந்த விலைக்கு வாங்கிவிடலாம். ஆசாமி ஏமாற்றினால் வழக்கும் தொடரலாம் என்று கணக்குப் போட்டார் பிள்ளை. ஆனால் சுந்தரம் பிடி கொடுக்கவில்லை.

'ஒப்பந்தம் பிறகு எழுதிக்கொள்ளலாம். தொகையைக் கொடுங்கள் அவசரம்'

ஆசாமியை ஏமாற்ற முடியாது என்று தெரிந்து கொண்ட பிள்ளை குழம்பினார். 'அதுவும் சரிதான்; ஆனால் இப்போது நீங்கள் கேட்ட தொகை கைவசம் இல்லை. ரொம்பக் குறைவாகத்தானிருக்கு.'

'எவ்வளவு இருக்கும்?'

'எழுபத்து ஐந்து' என்று ரேட்டை பட்டென்று குறைத்தார் பிள்ளை, ஆசாமி போய் விடுவார் என்றெண்ணி.

'அதையாவது எடுங்கள்' என்று கையை நீட்டினார் ஆசிரியர்.

பெரிய திருவடிக்கு வேறு வழியில்லை. நோட்டுக்களை வருத்தத்தோடு ஒரு தடவைக்கு இருதடவை எண்ணிக் கொடுத்தார், சுந்தரத்தின் கையெழுத்துப் பிரதியை பத்திரமாக மேஜைக்குள் வைத்துப் பூட்டினார், சுந்தரத்தின் மீது பாதி நம்பிக்கையும் பாதி சந்தேகமும் மாறிமாறித் தோன்றின.

'சரி, வருகிறேன். வணக்கம்'

'நாவலை நீங்கள் சொன்னபடி முடித்து தந்துவிடுங்கள். மறந்துவிடாதீர்கள்!'

'உங்களை மறப்பேனா? நல்லாச் சொன்னீக!' என்று சிரித்துக்கொண்டே நடையைக்காட்டினார் சுந்தரம்,

3

'ஜானகீ!'

கட்டிலில் படுத்திருந்த ஜானகி எழுந்துவந்தாள்.

'நீ இன்னும் சாப்பிடலையா? மணி மூணாகிறது' என்று அன்பாக விசாரித்தார். அவர் குரலின் குழைவு அவள் இதயத்தைத் தொட்டது, 'இல்லை, நீங்கள் வரட்டுமே என்று...' கொட்டாவிவிட்டாள் ஜானகி.

'அடி! பைத்தியமே! எனக்காக நீ பட்டினி கிடக்கவேண்டுமா என்ன? வா. இருவரும் சேர்ந்தே சாப்பிடுவோம்' என்று அவள் கையைப் பற்றி இழுத்தார் சுந்தரம்.

ஜானகிக்கு உடம்பு புல்லரித்தது. நாணம் அவள் முகத்தில் அழகு சேர்த்தது. அவள் சிரித்தபடி தலைகவிழ்ந்து நின்றாள்.

'பணம் கிடைத்துவிட்டது! தீபாவளிக்கு உங்க அப்பா வீட்டிற்குச் சென்று ஒருவாரம் இருந்துவிட்டு வருவோம். சரிதானே, ஜானகி!' என்று கொஞ்சுதலாகக் கேட்டார். 'உங்கள் இஷ்டம்' என்று கண்களைநீர்த்திரை மறைக்க, உதடுகள் துடிக்கச் சொன்னாள் ஜானகி. அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்த மகிழ்வு பிரவகித்து, அவளது கண்களில் சுடரொளியாய், உதடுகளில் புன்சிரிப்பாய், கண்ணாடிக் கன்னங்களில் தனி எழிலாய் சிந்தி மிளிர்ந்தது.

"லங்கர்" மார்க்

வாசனைப் பாக்குத்தூள்

★

அசல் பாதாம் எண்ணெய் ரோஜாப்பூ
குல்கந்து உலர்ந்த பழ வகைகள்
— சத்துள்ள விதைகள் கிடைக்கும் —

★

ரஷிக்லால் & கோ.,

கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ் 1.

தமிழிசைப் புலவர் அருணசலக்கவி

[சரவணபவானந்தர்]

'அருணசலக்கவி' ஓர் அருமையான தமிழ்க் கவிஞர். இயற்கையிலேயே இசைப் புலமை படைத்தவர். 'தமிழிசை இயக்கத்திற்கு அவர்தான் தலைவர்' என்று சொல்லவேண்டும். காரணம், இன்று நேற்றல்ல—சென்ற நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன்னேயே தமது இராம நாடக கீர்த்தனை மூலம் இசைத் தமிழை எங்கும் பரப்பினர். அது ஈடும் எடுப்பும் இல்லாத அழகிய தமிழ்ப் பாடல்கள் வடிவில் எங்கும் உலவியது.

'இசைப் பாடல்கள் எந்தத் தரத்தில் இருக்கவேண்டும்' என்ற உறவை அவர் ஒருவரே கண்டுபிடித்தவர். எதுகை, மோனை குறையாதபடியும், எமுகம், பராசம் குன்றுதபடியும், எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இடையூறில்லாதபடியும், பெரும்பாலும் அடைமொழியின்றியும், வர்ணனை கெடாமலும், வாக்கிற்கு எளிதாயும், படிக்கப்படிக்க ருசிக்கும்படியாயும், சட்டப்படியும் பாடிவைத்தவர் அருணசலக்கவியவர்கள்தான்.

அருணசலக்கவியின் பாடலில் அருள் மணம் கமழ்கின்றது. எளிய நடையில், இனிய ஓசையில் பாடவல்லவர். அருணசலக் கவிக்கு முன்னும் பின்னும் பலபாடல்கள் வந்திருப்பினும் அந்தப் பாடல்களெல்லாம் சில நாட்களே பரிமளித்து பின்னர் இறந்தொழிந்தன, காரணம் என்னவென்றல், அழுத்தந்திருந்தமில்லை. அருள் வளமில்லை. கற்றதை மாத்திரமே வைத்துக்கொண்டு கவிபாடினல் போதுமா? முடியாது. அருளுறவு அவசியம் வேண்டும். அப்பொழுதுதான் அக்கவிதைகள் மடியாது. ஆண்டுகள் ஆயிரம் ஆயிரம் ஆயினும் அப்படியே இருக்கும். ஏன்? இன்றைக்கு எடுத்துப் பாருங்களேன் அருணசலரின் அமுதத்தமிழை. புத்தம் புதிய ஒளிவீசும் இசைவடிவின் அமைப்பு பிரம்மிப்பாயிருக்கும்.

கவிராயர் அரும்பாடுபட்டு பாடல்களை குவித்திருக்கின்றர். ஒன்றல்ல — இரண்டல்ல—ஆயிரக்கணக்காக. சுமார் ஐம்பது வருடம் படித்த ஓர் படிப்பைக் கொண்டும், அதுகாறும் தாம் கண்ட அனுபவத்தைக் கொண்டும், அறிவும், அருளும் பொருந்த தமது அறுபதாவது வயதிற்குமேல் இசைத் தமிழ் பாட எண்ணி முன்வந்தார் என்றல், அப்பாட்டில் என்னதான் இருக்காது? இல்லை என்பது இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆம்! இன்று பாருங்கள்! எங்கு பார்த்தாலும் 'எனக்குன் இருபதம் நினைக்க வரம் அருள்வாய்—ஸ்ரீராமச்சந்த்ரா — எனக்குன் இருபதம் நினைக்க வரம் அருள்வாய்' என்ற பாடல் ஏக முழக்கமாய் இருக்கிறது. ஒரு பக்கம் நாடக உலகில் திரும்பினல் இராமாயணத்தில் தசரத சக்ரவர்த்தி புத்திரப் பேறு குறித்து தனது குலகுருவாகிய வசிட்டரிடத்தில் கூறி வருந்துகின்றர்—

'பிள்ளையில்லாத பாக்யம்—நான்
பெற்றிருந் தென்ன சிலாக்யம்
வள்ளலே ஜென்ம மலடன் என்றொரு காலே
வசை கொண்டேன் தசரதன் நான் புவி மேலே
கள்ளியானது நெடுக வளர்ந்த தாலே
காயுண்டோ கனிவுண்டோ அது போலே......

பிள்ளையில்லாத பாக்யம்—நான் பெற்றிருந் தென்ன சிலாக்யம்' என்று.

இந்த கவியில் அரசனின் குறை எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லப்படுகிறது பாருங்கள். என்ன எதுகை! என்ன மோனை! பழமொழி செருகப்பட்டிருக்கின்ற பண்பைப் பாருங்கள்!

பின்னர், இராமன் பிறந்து விஸ்வாமித்திரரின் யாகத்தைக் காக்கவேண்டிச் செல்லும் வழியில், தாடகை என்னும் அரக்கியைக் கண்டு கேட்டபொழுது, விஸ்வாமித்திரர் சொல்லுகின்றர்—

'பெண் இவள் அல்ல ராமா—தாடகை
வண்ணங் கொண்ட நமன் இவள் ராமா
மண்ணில் மெத்த உயிரை வதைத்த நிர் மூடி
கண்ணில் கண்டது கோடி காணுத தனந்தங் கோடி......

பெண் இவள் அல்ல ராமா' என்று.

இதில், இரட்டை எதுகை எவ்வளவு அழகாய் அமைந்து விஷயத்தையும் விடாதபடி விளக்குகின்றது பாருங்கள்! அப்பால், கன்னிமாடத்தில் சீதையைக் காண்கின்றன்

இராமன். சேடியர் புடைசூழ்ந்திருக்கின்றனர். அப்பொழுது கேட்கின்ருன்—

‘ஆரோ இவர் ஆரோ—என்ன பேரோ
அறியேனே
காருலாவும் சீருலாவும் மிதிலையில்
கன்னிமாடந் தன்னில் முன்னே
நின்றவர்......

ஆரோ இவர் ஆரோ.........

சந்த்ர விம்பமுக மல ராலே—எனைத்
தானே பார்க்கின்ருர் ஒரு காலே
அந்த நாளின் சொந்தம் போலே உருகிருர்
இந்த நாளில் வந்து சேவை தருகிருர்......

ஆரோ இவர் ஆரோ’ என்று.

இந்த அருமையான பாடல் நாடக உலகில் மாத்திரமல்ல. இன்று பிரபலமாக விளங்கும் பல பரதநாட்டிய மேடைகளிலும் பரிமளிக்கக் காணலாம். அப்பால் இராமனுக்கும் பரசுராமனுக்கும் சம்வாதம் நடக்கின்றபோது ப்ரசுராமன் சொல்கின்ருன்—

‘மண்ணில் அரசர்போல் காணுகிருயே--ஆசீர்
வாதம் ரகு ராமா’ என்று.

அதற்கு இராமன்—

‘கண்ணில் வேதியர் போல் காணுகிருயே
—நமஸ்
காரம் பரசு ராமா’ என்கின்ருன்.

இதில் எவ்வளவு கௌரவம் இருக்கிறது பாருங்கள்! இதில் பண்டைய நீதியையும் ஒருவாறு விளக்குகின்ருர் கவிராயர், பின்னர் சம்வாதம் தொடர்கிறது. பரசுராமன்—

‘தாடகை யெனும் பெண்மேல் சண்டை
கொள்ள ராசர்க்கு

:வேதாள உலக’த்தில் குமாரி கமலா

தான் விதியோ ராமா’ என்கிருன்

அதற்கு இராமன்—

‘வேடர் தொடுக்கும் வில்லை பிராமணர்
தொடத் தலை
விதியோ பரசு ராமா’ என்கிருன்

இப்படி வாதம்முற்றி முடிவில் பரசுராமன் வெகுண்டெழுந்து சொல்கின்ருன்—

‘சொத்தைவில் ஒடித்ததை மெத்த மெத்த
எண்ணித்
துள்ளாதே ரகு ராமா’ என்று.

அதற்கு இராமன் கோபம் பொங்கி கூறுகின்ருன்—

‘கற்ற வேதியன் என்று பொறுத்தேன்
பொறுத்தேன் குதிக்
காதே பரசு ராமா’ என்று

உடனே பரசுராமன் மிகுந்த சினங்கொண்டு தனது வில்லை எடுத்து வளைக்கச் சொல்லிக் கேட்கின்ருன்.—

‘அந்தவில் வளைத்தாயே இந்தவில் வளை
இந்தா
அடடா ரகு ராமா’ என்று

பார்த்தான் இராமன். பதிலொன்றும் சொல்லாதபடி வாங்கி வளைத்தான் வில்லை. நாணேற்றினுன், ‘இந்த அம்புக்கு வழி எங்கேயடா’ என்று கேட்கின்ருன்—

‘இந்தா வளைத்தேன் இதில் வைத்த
அம்புக்கு வழி
எங்கே பரசு ராமா’ என்று

நாணேற்றி நிற்கும் அம்பைக் கண்டான் பரசுராமன். நடுநடுங்கினுன். ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. ஓடிவிடலாமா என்று நினைக்கின்ருன். முடியாது. பின்னர் சரணுகதியடைந்து அம்புக்கு பலியாக தனது ஜபதப பலன்களையெல்லாம் அர்ப்பணம் செய்கின்ருன். இராமன் மன்னிப்புத் தந்தான் அவன் வந்த வழிபார்த்து ஓடச் சொல்லி. தலைதப்பினதென்று பிடித்தான் ஓட்டம் பரசுராமன். இதுவல்லவோ பாடல்! என்ன செம்பாகமான நடை! என்ன முறுக்கு! என்ன வேகம்! இது மாத்திரமா? இன்னும் பல பிரபலமான பாடல்கள்.

இராமன் குகனைக்கண்டு சினேகங்கொண்டு கனிவோடு கேட்கின்ருன்—

‘காட்டில் இருக்க வந்து காட்டுக் கருங் கான
நாட்டில் இருக்க லாமோ குகனே’ என்று

என்ன அன்பு பாருங்கள்! பிறகு சூர்ப்பனகை இராம லெட்சுமணர்களிடம் தான்

பட்டபாட்டை தன் அண்ணன் கரனிடம் சொல்லி முறையிடுகின்றாள்—

‘பட்டபாடு கேளாய்—கரனே நான்
பட்டபாடு கேளாய்
பட்டபாடு கேளாய்—பணைத்த தோளாய்—
பிடித்தவாளாய்
குட்டிமனிதன் என்னை—கட்டியிழுக்கப்
பின்னை
பெட்டி பாம்பு போலே—ஓட்டி அண்ணுவே-
நான்......
பட்டபாடு கேளாய்.
திருத்தமான சூரர்—இரண்டு வீரர்—
நராவதாரர்
அரக்கர் வேலை வந்து—நறுக்கவே நினைந்து
இருக்கிறாரே வந்து—ஒருத்தி பெண் பிறந்து
பட்டபாடு கேளாய்,'' என்று.

பின்னர், இராவணனிடத்தில் சீதையைப்பற்றி சூர்ப்பனகை வர்ணிக்கின்றாள்.

‘காணவேணும் லட்சம் கண்கள்—சீதா தேவி
தன்
காலுக்கு நிகரோ பெண்கள்
சேணுலகெங்கும் வாட்டி திசை யெஙகும
கீர்த்தி நாட்டி
திரியும் ராவணு உந்தன் இருபது கண்
போதுமா......
காணவேணும் லட்சம் கண்கள்.
குவளை விழிகளோ பாணம்—அவள் தன்
வார்த்தை
கொண்டால் அதுவே கல் யாணம்
நவ ரத்ன தங்கத் தோடு—நடையிலே
அன்னப் பேடு
அவனிமேல் இல்லை ஈடு—அவளுக்கவளே
சோடு
காணவேணும் லட்சம் கண்கள்’ என்று

அப்பால், சீதையைக் காணும் பொருட்டு அனுமான் எவ்வாறு கடலைக் கடந்தான், என்னும் காட்சியை கவிராயர் சித்திரிக்கின்றார்.

‘பாய்ந்தானே அனுமான்—மகேந்த்ரம் எறி
பாய்ந்தானே அனுமான்
பாய்ந்தொரு மூவுல கேந்திய ராவணன்
மாய்ந்திட மேவுகு லாந்தகன் எனவே—
பாய்ந்தானே அனுமான்’ என்று

இப்படி பாடல்களில் தொட்ட இடங்களிலெல்லாம் இன்பரசம் சொட்டும். இடத்திற்கேற்றவாறு இரசபாவங்கள் அமைப்பதில் இவருக்கிணை இவரே என்றுதான் சொல்லவேண்டும்.

விபீஷணன், இராமனைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுகின்ற இடத்தில் கூறுகின்றார் பாருங்கள்—

‘இராமனைக் கண்ணாரக் கண் டானே—
விபீஷணன் கை
மாமுடிமேல் வைத்துக் கொண் டானே
காமனும் செங்கமலப் பூமனும் பணிபரந்
தாமனை ஆயிர நாமனை கோதண்ட......
ராமனைக் கண்ணாரக் கண்டானே’

பாட்டு எவ்வளவு சுவையாய் இருக்கிறது பார்த்தீர்களா? பிறகு இராமன் விபீஷணனுக்கு இலங்காபுரி ராஜ்யத்தை அன்போடு அள்ளித் தருகின்ற அழகுதான் என்னே!

‘இந்தா விபீஷணு—இலங்காபுரி ராஜ்யம்
இந்தா விபீஷணு
இந்த்ராதி தேவர்கள் உள்ள நாள் வரைக்கும்
இந்தா விபீஷணு
வேதம் உள்ளளவும் வேத கீதம் உள்ளளவும்
பாரி
ஜாதம் உள்ளளவும் பஞ்ச பூதம் உள்ளளவும்
இந்தா விபீஷணு

ஆஹா! என்னே கருணை! உண்மை அன்பிற்கு என்னதான் உயர்வு தருகின்றான் இராமன். அதன் பின்னர், சுக்ரீவனுக்கும் இராவணனுக்கும் கடும்போர் நடக்கின்றதைக் குறித்து கவிபாட வந்தவர் ‘சுக்ரீவனுக்கும்’ என்று பல்லவி எடுப்பு தொட்டு அதற்குமேல்வைக்க அடுக்கு மொழி கிடைக்காதபடி வருந்தி நிற்க, மாருதியருளால் ‘தசக்ரீவனுக்கும்’ என்

‘ஆதித்தன் கன’வில் அஞ்சலிதேவி

னும் தொடர்பு கிடைக்கிறது. அருணுசலர் மனமிக மகிழ்ந்தவராய்—

'சுக்ரீவனுக்கும் தசக்ரீவனுக்கும்
தொடர்ந்ததே மல்யுத்தம்'

என்று பாட்டின் பல்லவியை பூர்த்தி பண்ணுகிறுர்.

இப்படி சந்தங்குன்றுதபடியும், சந்தர்ப்பம் கெடாதபடியும், பலநூறுபாடல்கள் பாடி இராமாயணத்தை முடிக்கின்றுர். இதில் 'மூலபல சண்டையைக் கேளும்' என்று யுத்தகாண்ட கடைசியில் வரும் பாடல், கதிகலங்கும்படியாக இருக்கின்றது. 'எப்படித்தான் இவருக்கு இந்த எதுகை நயங்களெல்லாம் கிடைத்ததோ!' என்று வியப்புற வேண்டியிருக்கின்றது.

அதன் பின்னர், நாடக முடிவிலே இராமர் பட்டாபிஷேக பாடல் பாடவந்தவர்—

'மகுடாபி ஷேகம் கொண்டானே—
ஸ்ரீ ராமச்சந்த்ரன்...

மகுடாபி ஷேகம் கொண்டானே' என்று வாய்நிரம்ப வாழ்த்துரை கூறி நூலை முடிக்கின்றுர்.

கவிராயரின் இராமாயணத்தை படித்து முடித்ததும் கலை தெளிகின்றது. ஓர் அபூர்வசக்தி உதயமாகின்றது. உண்மைக் கவியின் தன்மை வெண்மையாய் விளங்குகின்றது. 'பாட்டென்றுல் இப்படித்தான் இருக்கவேண்டும்' என்ற பாடம் நன்ருக கற்பிக்கப்படுகின்றது. இறுதியில் அருணுசலர் ஒரு அருமையான இயற்கைக் கவியென்பதும், இன்பத் தமிழிசையாளர் என்பதும், திட்டவட்டமாய்த் தெரிகின்றது.

அருணுசலக் கவி அவர்கள் பிறந்தது, தஞ்சை ஜில்லாவில் தரங்கம்பாடிக்கடுத்த 'தில்லையாளி' ஆகிய 'தில்லையாடி' என்னும் சிறந்த ஒரு சிறு கிராமமாகும். தாய் பெயர் வள்ளியம்மையார். தந்தை நல்ல தம்பியார் பிள்ளை. ஆதியில் ஜைனமாக இருந்து திருந்திய சைவ மதம். வேளாளர் வகுப்பில் கி. பி. 1712-ல் விஜய வருடம் ஆனி மாதம் கார்த்திகை நன்னுளில் நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். 'அருணுசலம்' என்னும் திருநாமம் அமையப் பெற்றுர்.

முறையே, ஐந்து வருடம், ஐந்து மாதம், ஐந்து நாட்கள் கடந்து பள்ளிக்கனுப்பப்பெற்றுர். பன்னிரண்டு வயது வரை படித்தார், இளமையிலேயே தாய் தந்தையரை இழந்தார். முன்பிறந்த தமையன்மார்கள் மூவரும் இளமை வாய்ந்தவர்களேயாதலால் ஆதரிப்பாரின்றி, சைவாதீனமாய் விளங்கும் தருமபுரத்தை அடுத்து ஆங்கு பத்தாவது பட்டமாக விளங்கிய சிவஞான தேசிகரால் ஆதரிக்கப்பெற்று ஆதீனவித்வான் அம்பலவாணக் கவிராயரிடம் சகல கலையும் கற்று தேர்ந்து கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவரானுர்.

படிப்பின் முடிப்பிலே வள்ளுவரையும் கம்பரையும் வழிகாட்டியாகக் கண்டார், குறளையும், இராமாயணத்தையும் உச்சி மேற்கொண்டார். சரியாக முப்பது வயதில் கருப்பூர் கன்னிகை மீனுட்சியை வாழ்க்கைத் துணைவியாக வரித்தார். காலத்தையோட்ட காசுக்கடை வைத்தார். ஓய்ந்த நேரங்களில் அரிய பல நூல்களை ஆய்ந்தார். அதில் குறள், மனுநீதி மார்க்கத்தையும், இராமாயணம், காயத்திரி மகாவாக்கியத்தையும் புதைபொருளாக கொண்டுள்ளது என்பதை பூரணமாக உணர்ந்தார். இடைவேளைகளில் பிரசங்க வாயிலாக எடுத்துச் சொல்ல ஆரம்பித்தார். உலகம் செவி சாய்த்தது.

ஒருநாள், வியாபார முறையில் புதுவை செல்ல புறப்பட்டவர், மத்தியில் சீகாழியில் தருமபுர மடத்தில் தங்கினுர். ஆங்கு தமது பழயசகாபாடியான கட்டளைத்தம்பிரான் சிதம்பரநாத முனிவர் பாடிவைத்திருந்த 'பள்ளு' பாதியை முதல் இரவே முழுப்பள்ளாக முடித்துவைத்துவிட்டு புதுவைக்குப் பயணமானுர். விடிந்ததும் தம்பிரான் சுவாமிகள் தாம் பாடிய பாதி 'பள்ளு' முழுப்பள்ளாக முற்று பெற்றிருப்பதைக் கண்டு அளவிலா ஆச்சரியங் கொண்டு அருணுசலரின் அகன்ற புலமையையும் அறிந்து, கவிராயர் எப்பொழுது வருவாரென எதிர்பார்த்திருந்து, வந்ததும் அன்று தொட்டு தம்மைவிட்டு அகலாதபடி காழி அருணுசலக்கவிராயராக ஆக்கிக் கொண்டார்.

கவிராயர் பின்னர் தில்லையாடி திரும்பவில்லை. மக்களுடன் சம்பந்தர் ஊரே தனக்கு சம்பந்தமான ஊராக எண்ணி சீர்காழியிலேயே சீராகத் தங்கிவிட்டார். வயது ஏற ஏற நூல்களும் பல ஏறிற்று. 'சீகாழி தலபுராணம்', 'சீகாழி கோவை', 'அசோமுகி நாடகம்', 'அனுமார் பிள்ளைத் தமிழ்', ஆரூர் தியாகேசர் வண்ணம்', 'சம்பந்தர் பிள்ளைத் தமிழ்', பரமேசர்மீது

'உலா', 'கோவை', 'இருபா இருபஃது', 'நான்மணிமாலே', இடைக்கழி குமரன்மீது கவிதை, தில்லேயாடி கருணேவள்ளல்மீது கவிதை—இப்படி எண்ணத் தொலேயாத பல நூல்களும், பல தனிப்பாடல்களும் அவ்வப்போது புனேந்து வெளிப்படுத்தினூர்.

இறுதியாக, கவிராயர் தமது அறுபதாம் வயதில் இராமாயணத்தை நாடக ரூபமாக இயற்றினூர். அதை சட்டநாதபுரம் வெங்கட்டராமையர், கோதண்டராமையர் ஆகிய இரண்டு இசை மணிகளும் வெளியில் விகசிதப்படுத்தினூர்கள். முதல் அரங்கேற்றம் திருவரங்கத்திலேயே செய்வது எனத் தீர்மானித்தார். பட்டர்கள் ஒப்புக்கொள்ளவில்லே.

உடனே வீறிட்டு எழுந்தார். விரைந்து சென்ருர். சயனித்திருக்கும் அரங்கநாதனேக் கண்டார். கேட்கின்ருர்—

'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா—ஸ்ரீரெங்க
நாதரே
என் பள்ளி கொண்டீர் ஐயா
ஆம்பல் பூத்த ஜெய பருவத மடுவிலே
அவதரித் (து) இரண் டாற்று நடுவிலே
(ஏ)
கோசிகன் சொல் குறித்ததற்கோ—அரக்கி
குலேயில் அம்பு தெறித்ததற்கோ
ஈசன் வில்லே முறித்ததற்கோ—பரசு
ராமன் உரம் பறித்ததற்கோ
மாசிலாத மிதிலேசன் பெண்ணுடன்
வழி நடந்த இளேப்போ
தூசிலாத குகன் ஓடத்திலே கங்கைத்
துறை கடந்த இளேப்போ
மீசரமாம் சித்ர கூடச் சிகரக் கல்
மிசை நடந்த இளேப்போ
காசினிமேல் மாரீசன் ஓடிட
கதி தொடர்ந்த இளேப்போ—ஓடிக்
களேத்தோ—தேவியைத் தேடி
இளேத்தோ—மரங்கள் ஏழும்
தொளேத்தோ—கடலேக் கட்டி
வளேத்தோ—இலங்கை யென்னும்
காவல் மா நகரை இடித்த வருத்தமோ
ராவணுதிகளே அடித்த வருத்தமோ
ஏன் பள்ளி கொண்டீர் ஐயா'

இந்தப் பாட்டைக் கேட்கும் அரங்கன் தலேயசைக்காதபடி இருக்க முடியுமா? எழுந்தான் பரந்தாமன். எல்லோர் கனவிலும் சாதித்தான். விடிந்தது. பங்குனி அஸ்த நட்சத்திரம், கம்பர் அரங்கேற்றிய இடத்தில், திருக்கோட்டியில் நமது கவிராயரின் இராமாயணம் அரங்கேற்றம். வரிசையுடன் பரிசுகளும் பல பெற்ருர். வெற்றியுடன் புறப்பட்டார். தஞ்சை துளசி மகாராஜா, புதுவை ஆனந்தரங்கம் பிள்ளே, மணலி முத்துகிருஷ்ண முதலியார் ஆகிய பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆங்காங்கே பலமுறை அரங்கேற்றினூர். அணிபணிகள் ஆயிரம் ஆயிரமாகப் பெற்ருர். புகழ் எங்கும் பரவியது. உலகம் தமிழிசையின் தத்துவத்தை உணர்ந்து,ஒரு வருடத்தில் பொன்னும், பொருளும் ஏராளமாகக் குவிந்தன. செல்வக் குழந்தைகள் மூவருடனும் கொஞ்சிக் குலாவி களித்து அவர்களே தக்க விற்பன்னர்களாக ஆக்கி வைத்து, முடிவில் தமது அறுபத்தேழாம் வயதில் கி. பி. 1779-ல் விகாரி வருடம், ஆனிமாதம், சுவாதி நட்சத்திரத்தில் சீர்காழிப் பதியிலேயே இறைவன் திருவடி அடைந்தார்.

கவிராயரின் திருவுருவம், தலேயில் தாழ்வடமும், இடையில் வெள்ளிய உடையும் மேனியில் திருநீறும் பூசி, சிவச்சின்னங்களோடு விளங்கியதாகத் தெரிகிறது. கவிராயர் தில்லேயாடியைவிட்டு சீகாழிக்கு வருகின்றபோது வயது நாற்பத்திரண்டு இருபத்தைந்து வருடம் காழியிலேயே தங்கியிருந்திருக்கின்ருர். முடிவில் சீகாழியே கவிராயரை சேர்த்துக்கொண்டது,

இன்றைக்கு நூற்றி அறுபத்தொன்பது ஆண்டுகள் பறந்துவிட்டன. இப்பொழுது எங்கு பார்த்தாலும் கவி அருணுசலர் அவர்களின் இசைப்பாடல் கமழ்கின்றது. தமிழுக்கு ஏற்ற முண்டாகியிருக்கின்றது. தமிழிசைப் புலவர்களில் தலேசிறந்தவர் 'அருணுசலக் கவி' அவர்களே என்பதை உலகம் ஒப்புக்கொள்கின்றது. இவர்போல் இன்னும் பல இசைப்புலவர்களே நமது தமிழகம் தந்தருளுமாக! வெல்க தமிழிசை!

★

'வேதாள உலக'த்தில்

மங்களம்

★

வசியம்

அசோகன்

‘ஏ, அண்ணே! நீங்க என்ன புதுசா? இப்படி வாங்க! வந்து என் கதையைக் கொஞ்சம் கேளுங்க! அதன் பிறகு சொல்லுங்க! நான் இருக்க வேண்டிய இடம் எது என்று.

என் அண்ணே அப்படி ஒரு மாதிரிப் பார்க்கிங்க? எனக்கு மூளைக் கோளாறு என்று நினைக்கிங்களா? சேச்சே! அப்படி ஒன்றும் இல்லை. இல்லவே இல்லை.

நான் சொல்வதைக் கேளுங்க! நான் இங்கு வந்து நாலு வருஷங்கள் ஆகப்போகிறது. குறுகிய எல்லைகளை யுடைய இச் சிறிய சிறைச்சாலையி லிருந்து உலகமான பரந்த சிறைக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பே போயிருக்க வேண்டியவன். என் முட்டாள்தனம்! யானை தன் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக் கொள்கிற மாதிரி கெடுத்துக் கொண்டேன்!

விளங்கவில்லையா? விளங்கச் சொல்கிறேன் கேளுங்கள்! சொன்னாத்தானே புரியும்! சுமார் நாலு வருஷத்திற்கு முன். ஒரு நாள் சாயங்காலம். ‘கரு, கரு’ வென அந்தி மயங்கும் வேளை. வீடுகளி லெல்லாம் விளக்கு ஏற்றும் சமயம். எதிர் வீட்டிலே அந்தக் குழந்தை தளர் நடை நடந்து வந்து, அளிப்பக்கம் தயங்கி நின்றது. தலையை ஜோராய்ப் படியச் சீவி, முன்னும் பின்னும் ஜடைப் பின்னி, அந்திமந்தாரைக் கொத்தைச் சூட்டியிருந்தாள் அதன் தாய். அதன் கண்களில் குறு; குறுத்த பார்வையிலே அப்பொழுது ஏனோ ஒரு மிரட்சி. நின்று மெதுவாக எட்டிப் பார்த்தது.

எப்பொழுது வெளியே வரும் என எதிர்பார்த்துக் காத்திருந்தவன்தான் நான். ஆனால் அதைக் கண்டவுடனே க்ஷணநேரம் தயங்கி நின்றேன். விவரம் புரியாத ஒருவிதஅரிப்புஉள்ளத்தில். கொஞ்ச நேரத்தில் சமாளித்து விட்டேன். பக்கத்திலே போய் ‘பாப்பா இந்தா!’ என்றேன். அடிக்கடி அந்தப் பக்கமாகப் போகும்போது, வரும்போதெல்லாம் அக் குழந்தையை நான் கவனித்திருக்கிறேன். அதுவும் என்னைப் பார்த்திருக்கிறது. சமயங்களில் என்னைக் கண்டு சிரித்ததாகக் கூட ஞாபகம். வெறும் பிரமையாக இருக்கலாம். இப்பொழுது அது என்ன நினைத்ததோ! அடையாளம் புரிந்ததோ என்னவோ! என் சப்தத்தைக் கேட்டதும், என்னைக் கண்டதும் ‘கோ’வென அலறி அழ ஆரம்பித்து விட்டது.

‘எம்மா கண்ணு! இங்கே வா! என் அழுதே?’ என இனிமையாகக் கேட்டுக்கொண்டே வந்தாள் அதன் தாய். வந்தவள் நீட்டிய கரத்தோடு, கருக்கிருட்டில், கரு உருவமாக நிற்கும் என்னை என்னவென்று எண்ணினாளோ தெரியாது. நிமிஷ நேரம் மலைத்து நின்றாள். பின்பு ‘யாரது?’ என்றாள். நான் பதில் சொல்லவில்லை. என்னத்தைச் சொல்வது? அவ்வளவுதான். ‘கள்ளன்! கள்ளன்!’ எனக் கத்தினாள். அந்த இடத்தைவிட்டு நகரப் பார்த்தேன். ஓடிவிட வேண்டும் என்ற எண்ணம். பயத்தில் கால்கள் எழவில்லை. அவளது ஓலத்தைக் கேட்டு தெருவில் போகிறவர்கள் சிலர் வந்து என்னைப் பிடித்துக்கொண்டார்கள்.

‘கையிலே என்னடா? அட, லட்டா? பய மிட்டாயைக் கொடுத்தில்லா குழந்தை நகையை அபேஸ் பண்ணப் பார்த்திருக்கிறான்!’

‘ஆதித்தன் கன’வில்

ஒருவர் உதிர்த்த மேற்படி அபிப்பிராயத்தைக் கேட்டதும், ‘சண்டாளப் பாவி! குழந்தை கழுத்திலே கையைப் போட்டுட்டானே! கண்ணு கதறி அழுதுச்சு! சத்தத்தைக் கேட்டு நான் விழுந்தடிச்சு ஓடியாந்தேன். இந்தத் தடியன் குழந்தை வாயைப் பொத்திச் சத்தத்தை அமுக்க முயல்கிறான். நான் மட்டும் வரலைன்னா குழந்தையை கொன்னுகூட இருப்பான்! நல்ல காலம்! ஆண்டவன் அருள்!’ என்று புலம்பினாள் தாய்.

அவளது நல்ல காலத்தையும், தெய்வத் திருவருளையும் பற்றி அவள் தொடர்ந்து புகழ்பாடித் திருப்தியுற்ற வேளையில், எனது போதாத காலத்தையும்,..புத்தி கெட்ட போக்கையும் எண்ணி மனம் புழுங்கி நின்றேன் நான். அவளது கற்பனைத் திறமையைக் கண்டு முதலில் வியப்பு. பிறகு ஆத்திரம். குழந்தையின் கழுத்தில் கை வைத்தேனாம். அழுகையை அடக்க முயன்றேனாம். பாசாங்குக்காரி எவ்வளவு ஜாலக்காகப் பசப்புகிறாள் என்ற கோபம் வந்தது. பிறகு அவள் தாய், தனது குழந்தையைக் காப்பதற்காக, கொடியவன்

எனக் கருதிய என்னை மற்றவர்களுக்குக் கொடூர வர்ணம் தீட்டிக் காட்டுவதற்காக அப்படிச் செய்கிறாள் என்பதை உணர்ந்தேன். கோழிகூடத்தான் குஞ்சைக் காப்பதற்காகக் கோபமாக கொத்த வருகிறது. ஒழுங்காக இருப்பதைவிட்டு நான் என் இதுமாதிரிக் காரியத்தில் இறங்க வேண்டும்?

வரவரக் கூட்டம் அதிகரித்தது. கூட்டத்தில் ஒருவர் என்னை அடையாளம் கண்டுகொண்டார். 'அட, நம்ம எட்டு கந்தசாமி பிள்ளை மகன்லா! இவனா இப்படி செய்தான்? வேலியே பயிரை மேயத் தொடங்கிய கதைதான்! என்றார் அவர். 'அவனா? அவன் அலைஞ்ச அலைச்சலைப் பார்த்த நான் அப்பவே நினைச்சேன் பய இப்படித்தான் என்னைக்காவது ஒருநாள் செய்வான்னு!' என்று தமது தீர்க்க திருஷ்டியைத் தெரிவித்தார் இன்னொருவர். 'நான் போய் எட்டய்யா இருக்காகளான்னு பார்க்கேன். மகனது திருவிளையாடல் லீலையை அவுகளும் பார்த்து மகிழணும் பாரும். இந்தா நான் போய், இருந்தாக் கூட்டியாரேன்' என ஓடிப்போனான் ஒருவன்.

பூமி வெடித்து என்னை அப்படியே கபளீகரம் செய்யக் கூடாதா, அந்த இடத்திலிருந்து திடீரென அந்தர்த்தியானமாகி விடக் கூடாதா என்றெல்லாம் இருந்தது எனக்கு. அம்மாதிரி விபரீத லீலைகளில் ஏற்பட்ட மோகமே மேற்படி விபத்திற்குக் காரணம் என்பது அப்போது எனக்குப் புரியவில்லை. அந்த நேரத்திலே அதையெல்லாம் பற்றி எப்படி நிதானமாக ஆராய முடியும்? அப்பா வந்தால் என்ன சொல்வார், என்ன செய்வார் என்பது எனக்குத் தெரியும். ஒரு வருஷமாக கிரு புர்ரென்றுதான் இருக்கிறோம். ஒருவரை ஒருவர் சந்திப்பதுகூட அபூர்வம். நாடகம், சினிமா என்று கண்டபடி அலைந்துபோன ஸெலக்ஷன் பரீட்சையில் கோட்டைவிட்டு விட்டேன் என்பதற்காகக் கோபம். நாடகக்காரரிடம் எல்லாம் போய் ஓசி டிக்கட்டிற்காக நின்று அவர் பெயரைக் கெடுக்கிறேன் என்று ஆத்திரம். மொத்தத்தில் நல்ல பையன்கள் நடக்க வேண்டிய பாதை எனச் சமூகம் நிர்ணயித்து விட்டிருக்கிற வழியை விட்டு ஒதுங்கி நடக்கிறேன் என்ற வெறுப்பு. அவர் அப்பொழுது வீட்டில் இல்லாமல் இருக்க வேண்டும் கடவுளே எனப் பிரார்த்தித்தேன். வீட்டில் இல்லை என்றால்தான் என்ன, பிறகு போலீஸ் ஸ்டேஷனில் தெரியாமலா போய்விடும் என்ற எண்ணம் வந்தது. எல்லாவற்றையும் யோசியாமல் விளையாட்டுப் போக்கில் காரியங்கள்செய்ய முனைந்தது எவ்வளவு வினையாக வந்து முடிந்துவிட்டது என யோசித்து நின்றேன். அதற்குள் அப்பா வந்துவிட்டார்.

'ஏண்டா தேவடியா மகனே! எத்தனையோ விதத்தில் என் பேரைக் கெடுத்தது போதாது என்று இப்படி வேறு ஆரம்பிச்சிட்டையா?' வாய் வார்த்தைகளைப் பொழிந்துகொண்டிருக்க கைகள் படார், படாரெனப் பிடரியிலும், கன்னங்களிலும் பேயறை அறைந்தன. கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பொங்கிப் பிரவகிக்கத் தலை கவிழ்ந்து நின்றேன்.

'தூரப் போங்கள்!'

இடிபோல கர்ஜித்த அவர் குரலைக் கேட்டுச் சுற்றி நின்றவர்கள் சிறிது விலகினார்கள்.

'நீங்க குழந்தையை எடுத்துக்கிட்டு ஸ்டேஷனுக்கு வாங்கம்மா!'

கட்டளையைக் கேட்ட அவள் அக் குழந்தையின் தாய்—அக் கலவரத்திற்கிடையே சிறிது அழுகை அடங்கி நின்ற குழந்தையின் கன்னங்களையும் முகத்தையும் சேலைத் தலைப்பால் துடைத்தாள். 'மரியம்மா! நான் ஸ்டேஷனுக்குப் போறேன். நீ வீட்டைப் பார்த்துக்கோ. ஐயா வந்தா ஸ்டேஷனுக்கு வரச் சொல்,' என்றாள். பிறகு குழந்தையை எடுத்து ஒக்கலில் இடுக்கிக்கொண்டு புறப்பட்டாள்.

'கூட யாராவது இரண்டு பேர் சாட்சிக்கு வாங்க! எங்கே அந்த லட்டு? இன்னும் கையிலேதான் வச்சிருக்கையா? பத்திரமாக வச்சிரு! நடடா கழுதை!'

என் முதுகில் மீண்டும் ஒரு குத்து விழுந்தது. எனது கரங்களைப் பற்றி ஸ்டேஷனுக்கு நடத்திச் சென்றார் அவர். கூட்டமும் பின்னாலேயே தொடர்ந்தது.

நியாய பரிபாலனத்திற்காக மகன், தந்தை என்ற பரிவுக்கு கூட இடம் கொடாமல் மிகவும் கண்டிப்பாக நடந்துகொண்டார் எனத் தன்னை ஊரார் புகழ வேண்டும் என்பது அவர் நினைப்பு. நான் சொல்கிறேன் இந்தப் புகழ் ஒரு போதை மாதிரி. நல்ல வழியிலோ, கெட்ட வழியிலோ கொஞ்சம் அதன் இன்ப லயத்திலே சொக்கி விட்டால் அப்புறம் மேலும், மேலும் என ஈடுபடத் தூண்டும். அதற்கு ஆசைப்படப் போய்த்தானே நான் இந்தக் கதிக்கு ஆளாக வேண்டிவந்தது. அது வேறே விஷயம். பெரிய கதை. ஆரம்பிச்சதை முதலிலே சொல்லிவிட்டுப் பிறகு அதுக்கு வாறேன். நின்னு கேக்கலா

மாதவிடாய்

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)
எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாகும். உத்திரவாத முள்ளது. போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 7 (ஸ்பெஷல்) ரூ. 9.

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
12-ஞ / கு. கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது (ஸ்பெக்ஜெல்லி) டெம்பரவரியாக தடுக்கும். பில்ஸ் ரூ. 10. ஜெல்லி ரூ. 5/8.

சீனு அண்டு கம்பெனி
P. B. No. 1638 (E)
MADRAS—1.

யில்லே! புதுசா வேலைக்கு வந்திருக்கோமே, கைதியோடே பேசிக்கிட்டு நிற்பதை யாராவது பார்த்தால் என்னுவது என்ற பயமா? இத்தனை நாளைய எனது அனுபவத்தைக்கொண்டு சொல்கிறேன். இந்த நேரத்திலே யாரும் வரமாட்டா. சூபிரெண்டு வர இன்னும் வேண்டிய நேரம் கிடக்கு. நாலு நாளைக்கு முந்தி உங்களைப் பார்த்தவுடனேயே இவர் நல்லவர் இவரிடம் நம்ம விஷயத்தைச் சொல்லலாம் என்று பட்டது. எவ்வளவோ நாளா மனதிலே கிடந்து குமையும் விஷயம். அதுதான் சொல்கிறேன்.

ஸ்டேஷனை அடைந்ததும் என் தந்தையே கேஸைப் பதிவு செய்வது, சாட்சிகளிடம் வாக்குமூலம் வாங்குவதுபோன்ற இதர விவரங்களையும் எழுதி முடித்தார். லட்டை 'எக்ஸிபிட்டாக' கோர்ட்டிலே தாக்கல்செய்வதற்காகப் பத்திரப்படுத்தினர். எல்லா வழக்குகளையும் போலவே என் வழக்கும் கோர்ட்டுக்கு வந்தது. மாஜிஸ்டிரேட் சம்பிரதாய விசாரணைகளையெல்லாம் முடித்தீ, நான் குற்றவாளியென ருசுவானதால் திருட முயன்ற குற்றத்திற்காக இரண்டு வருஷக் கடுங்காவல் தண்டனைவிதித்தார். பேசாமல் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஏனே என்னுள் ஒரு வெறி. திடீரெனக், கத்தினேன், 'செய்யாத குற்றத்திற்குத் தண்டனை தரும் பிரகஸ்பதிகளே! செய்த குற்றத்தைக் கண்டு பிடிக்கவில்லையே நீங்கள்!' கத்தி முடிந்ததும் 'கட, கட' வெனச் சிரித்தேன். எனது செயலைக் கண்ட கோர்ட்டே திகைத்து விட்டது. கைதிக் கூண்டிலிருந்து என்னைச் சிறைக்கு நடத்திச் செல்ல முன்வந்த போலீஸ்காரன் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். என் தந்தை முழித்த முழியை பார்க்கணுமே! பையனுக்குப் பைத்தியம்பிடித்து விட்டது என்று எண்ணினரோ என்னவோ! 'கள்ளிக்கிட்டுப் போ. மேன்! என் நிக்கே?' எனப் போலீஸ்காரனிடம்இரைந்தார் பிராசிகியூடிங் இன்ஸ்பெக்டர். மறுபடியும் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்தேன். 'கடந்த வாரம் இறந்ததே என் அக்கா குழந்தை! அது தானுகவா செத்தது? நான்தான் கொன்றேன். கொலை செய்தது நானேதான்,' எனக் கொக்கரித்தேன். 'பெரிய சூரப்புலிகள் மாதிரி கையும் களவுமாக என்னைப் பிடித்து விட்டதாக எண்ணி இறுமாந்து போனீர்களே! தண்டிக்கிறீர்களே! அந்தக் குற்றத்தைக் கண்டு பிடிக்க முடிந்ததா உங்களால்?! 'கெக் கெக்கே' எனக் கெக்கலி கொட்டினேன்.

மாஜிஸ்டிரேட் என்னை உறுத்துப் பார்த்தார். 'ஏய், என்ன உளறுகிறுய்?' என்றுர்.

'உளறவில்லை. உண்மை. அக்குழந்தைக்கு யமனுயிருந்தவன் நான். இக்குழந்தையையும் கொல்ல முயன்றேன். தப்பித்துவிட்டது. என்ன, என் பேச்சில் நம்பிக்கை யில்லையா? என்மீது சந்தேகமா? லட்டைப் பாருங்கள். தெரியும்,' என்றேன். அதன் பிறகு மௌனமானேன்.

லட்டு வைத்தியபரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. வழக்கு ஒத்திபோடப்பட்டது.

பரிசோதனையில் லட்டு விஷம் கலந்தது என்பது வெளியாயிற்று. கடந்தவாரம் நான் கொடுத்த லட்டைத் தின்றதும் தான் திடீரென வெண்ணுரை, வெண்ணுரையாகக் கக்கித் தனது குழந்தை செத்தது என்ற உண்மையை, அதுவரை சந்தேகியாமல் இருந்த, எனது தமக்கை சாட்சியம் சொல்லி ஊர்ஜிதம் செய்தாள். என்ன காரணம் பற்றி இம்மகத்தான பாபத்தைச் செய்யத் துணிந்தேன் என்று கேட்டார்கள். பதிலே சொல்லவில்லை. கல்லுளி மங்கன் மாதிரி ஒரே மௌனம் சாதித்துவிட்டேன். சித்தப்பிரமை என்று கூறி மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுள் தண்டனை விதித்தார்கள். முதலில் மூளை வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுப் பின் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என விதித்தார்கள். ஏனெனில், பைத்தியமானல் வெறி நிலையிலே தண்டனையின் தன்மையைஉணராமற் போய்விடக்கூடாது பாரும்! ஒரு வாரம் வைத்தியம் நடந்தது. அதன் பின்பு இங்கே அனுப்பி விட்டார்கள். இங்கே இருந்த இவ்வளவு நாளைய அனுபவம் என்னை அறிஞனுக்கி யிருக்கிறது.

'ஏன் மறுபடியும் ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள்! எனக்குப் பைத்தியம் தெளியவில்லை என்ற நினைப்பா? அல்லது கொலைகாரனை இவன் பேச்சுக்குச் செவி சாய்ப்பானேன் என்ற எண்ணமா? பயங்கரக் கொலைக் குற்றமாக இப்பொழுது தோன்றும் எனது அந்தச் செய்கை அப்பொழுது வெறும் விளையாட்டாக—சாதாரண விஷயமாக—தோன்றியது. 'அடபாவி!' என நீங்கள் திட்டலாம். எனக்கு என் அவ்வித வெறி ஏற்பட வேண்டும்? தெரியாது: ஆனல் எப்படி ஏற்பட்டது என்பது தெரியும்.

ஐந்தாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் நானும் நண்பர்களுமாக பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தோம். கழைக்கூத்தாடி ஒருவன் வேடிக்கைகள் காட்டிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி சுமாரான கூட்டம் கூடி நின்றது. நாங்களும்

ஆர். வி. ஷண்முகம் & கோ.
நெ. 1, எழுத்துக்காரன் வீதி
காலாடிப்பேட்டை, மதராஸ், 19.

M. U. A. C. தயாரிப்பு

★ கீத காந்தி ★

(காந்திஜீயின் உபதேச சாரம்)

நூதன சமூகச் சித்திரம்

●

நடிகர்கள் :

பி. ஏ. பெரியநாயகி
பி. எஸ். சரோஜா
லலிதா பத்மினி
ஆர். பத்மா
லக்ஷ்மிபிரபா
சரோஜா
டி. ஆர். ராமசந்திரன்
எம். ஆர். எஸ். மணி
வி. குமாரசாமி

மற்றும் பலர்

●

டைரக்ஷன் : கே. சுப்ரமண்யம் B.A., B.L.,

ஸ்டுடியோ : நெப்டியூன்

கலந்தோம். கையில் ஒரு துண்டுக்கோலை வைத்து, ஆட்டியவாறே, 'ஓடியா! ஓடி வா! அதோ! அதோ வந்துவிட்டது! அந்தக் கோபுரத்திற்கு மேலே! கோவில் தட்டட்டியில்! வா! ஜல்தி! வா!' எனக் கத்திக் கொண்டிருந்தான். சிறிது நேரம் சென்றதும், அபூர்வமான பல வித்தைகள் செய்தான். சுவாரஸ்யமாக எல்லாவற்றையும் கவனித்தேன். வீடு திரும்பும் பொழுது நண்பர்களைக் கேட்டேன். அவன் 'ஓடிவா, ஓடி வா' என்று எதைக் கூப்பிட்டான் என்று. 'அதுவா, அது குரளி. அதுதான் அவன் அந்த வித்தையெல்லாம் செய்ய உதவி செய்யுது,' என்று சொன்னார்கள். அது எப்படி இருக்கும், என் நம் கண்களில் தட்டுப்படவில்லை என்றெல்லாம் கேட்டேன். அவர்களால் விளக்கிச் சொல்ல முடியவில்லை. வித்தை செய்ய உதவுவது என்று மட்டுமே சொன்னார்கள். எனக்கு திருப்தி ஏற்படவில்லை. வீட்டை யடைந்ததும் பாட்டியிடம் விசாரித்தேன். அவள் என்னென்ன கதைகளெல்லாமோ சொன்னாள். அவள் பிறந்த சீமையான மலையாளத்திலே மந்திரவாதிகள் புரிந்த இந்திர ஜால வித்தைகள், அட்டமாசித்தி அற்புதங்கள்பற்றியெல்லாம் அளந்தாள். பேரப்பிள்ளையை மகிழ்விக்கிறோம் என்ற நினைப்பு அவளுக்கு. அவன் மனதில் விஷ வித்தை ஊன்றுகிறோம், அது முளைத்துப் படர்ந்து என்னென்ன விபரீதங்களெல்லாம் விளைவிக்கப் போகிறது என்பது பாவம் அவளுக்குத் தெரியாது! கதை கேட்டு முடிந்ததும், 'என் பாட்டி? நானும் ஒரு மந்திரவாதி ஆகலாமா?' என்றேன், 'சே, உனக்கு எதற்கு அந்தக் கர்மம் பிடித்த தொழில்!' என்றாள். நான் பதில் சொல்லவில்லை. ஆனால் அது கர்மம்பிடித்த தொழில் என்பதை என் மனம் ஒப்பவில்லை. மகத்தான பெருமை அளிக்கும் வரப்ரசாதம் என்றே கருதினேன். பள்ளிக்கூடம் போகும் போது, வரும் போதெல்லாம் மந்திரவாதியாவதற்குரிய வழிகளைப்பற்றியே நினைவு. உறக்கத்தில் நான் அப்படியாகி அற்புதங்கள் விளைப்பதைப்பற்றிக் கனவு. என் நண்பர்களும் வேடிக்கைபார்த்தார்கள். ஆனால் அதோடு மறந்துவிட்டார்கள். என்னை மட்டுமே மேற்படி விபரீத ஆசை பற்றியது. ஏனோ!

நாளாக ஆக ஆசை நலியவில்லை. வளர்ந்தது. ருசியான பதார்த்தை ஆசையால் சூடாக இருக்கும்போதே எடுத்து வாயில் போட்டுக்கொண்டு மெல்லவும் முடியாமல் துப்பவும் மனம் வராமல் திண்டாடுபவன் நிலையில் இருந்தேன். அப்போது சின்னப் பையன். என் ஆசையை யாரிடமும் சொன்னால் என்னாகுமோ என்ற பயம். ஆனால் வேண்டாம் என வெறுத்து ஒதுக்கவும் மனமில்லை. பெரியவனானவுடன்

திரு எம். எம். மாரியப்பா

★

★

'இசை உலக இளம் பரிதி' என்று அழைத்தார் ஆசிரியர் சாரதி. 'நாடக அரங்கு இளவரசு' என்ற பட்டத்தை வழங்கினார் தஞ்சைத் தலைவர் டி. வி. சடகோபாலாச்சாரியார். 'என் வாழ்க்கையிலேயே இதுபோன்ற நாடகத்தைக் கண்டதில்லை. இதோ, இந்தத் தங்கப் பதக்கத்தை என் மனப்பூர்வமாக உன் புகழ் நாடெங்கும் பரவவேண்டும் என வாழ்த்தி அளிக்கிறேன்,' என்றார் மாஜி சென்னை கவர்னர் ஸர். ஆர்ச் பால்ட் நை.

இவைபோன்ற அநேக பாராட்டுக்களும், நட்சாட்சிப் பத்திரங்களும், தங்கப் பதக்கங்களும் பெற்றுள்ளவர். இவர் புகழ் நாடக உலகு மட்டுமின்றி, சினிமா உலகிலும் பரவியுள்ளது. 'கஞ்சன்' படத்தில் 'இந்த உலகினில்' 'நீர் சூழ்ந்த நாடெல்லாம்' 'வாழ்க தமிழ் நாடு' முதலிய பாடல்களையும், 'ராஜகுமாரி'யில் 'அன்பின் பெருமை,' 'திருமுக அழகை', 'அரசகுமாரி', கண்ணாரக் காண்பதென்றோ', மாமயிலென நடனம், மாரன் அவதாரம்' முதலிய பாடல்களும் 'அபிமன்யு'வில் 'பாரில் பிறந்தென்ன புண்யம்,' என்ற பாடலையும் பாடியிருக்கிறார். பல படங்களுக்குப் பாடிக்கொண்டிருக்கிறார். சந்தர்ப்பம் கிடைத்தால் நாடக மேடை அனுபவமுள்ள இவர், உன்னதத் திரை நடிகராகவும் பிரகாசிக்கலாம். பட முதலாளிகளின் கவனம் இவர் பக்கம் திரும்பவேண்டும்.

குரு மருந்துகள்

உலகப் பிரசித்தி பெற்றவை

ஆங்கிலம் - தமிழ் முறை இணைப்பு

60 வருட ஆராய்ச்சி - அநுபவ தயாரிப்புகள்

★

குரு தைலம் (அஞ்சனங்களுக்கெல்லாம் அரசன்)	1	6	0
குரு பல்பொடி	0	5	0
குரு களிம்பு (GURU OINTMENT)	0	14	0
குரு டைகர் மாத்திரை (காலரா நிவாரணி)	0	14	0
குரு சந்தான சொர்ணம் (ஸ்திரீகள் சகல நோய்க்கும்)	5	0	0

மற்றும் ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனி தயாரிப்புகள் உண்டு.

குரு மருந்து சாலையில் 60-க்கு மேற்பட்ட பல வகை மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

ஒரு முறை அவசியம் பரீட்சியுங்கள்.

★

உங்கள் ஊர் மருந்து—ஷாப் வியாபாரிகளிடம் கேளுங்கள்;
இல்லாவிட்டால் எழுதுங்கள்.

போன்: 248
தந்தி: GURU CURES
தபால் பெட்டி: 22

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்
குரு மருந்துசாலை, திருச்சிராப்பள்ளி.

கவனித்துக் கொள்ளலாம் எனக் காத்திருந்தேன்.

வருஷங்கள் ஓடின. இடையில் கதைப் புத்தகங்களில் மந்திரவாதிகளைப்பற்றிப் படித்த கதைகளெல்லாம் என் ஆசைக்கு உரமூட்டின. விஷயம் தெரிந்தவர்கள் எனக் கருதி விசாரித்தவர்களிடம் சேகரித்த தகவல்கள் பரீட்சை பார்க்கத் தூண்டின. மலையாள மாந்தரீகப் புத்தகங்கள் என குஜிலிக் கடைகளில் தென்பட்ட புஸ்தகங்களை வாங்கிப் படித்ததில் அதிலுள்ள விஷயங்கள் ஆச்சர்யமாகப்பட்டன. அவற்றிலுள்ள முறையை, பராபரியாகக் கேள்விப்பட்ட விஷயங்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு குறளியை அடிமைப் படுத்துவது. வசியமை தயாரிப்பது அனைத்தையும் சித்தியாக்கி விட்டால் பின்பு ராஜாதான் என எண்ணினேன். ஆனால் பரிசோதனையில் ஈடுபடும் துணிச்சல், தெம்பு வரவில்லை. கடந்துபோகும் காலத்தோடு வளர்ச்சி யடைந்து வந்தது ஆசை. ஐந்தாவது பாரத்தை அடைந்ததும் பெரியவனாகி விட்டோம் என்ற நினைப்பு பிறந்தது உள்ளத்தில். அதுவரை இந்திர ஜால வித்தைப் புத்தகங்களில் கொடுத்திருந்த தண்ணீரைத் தயிராக்குவது போன்ற சில்லரை வித்தைகளைச் செய்து வெற்றி கண்டிருந்தது குறளி வசியத்தையும் முயன்று பார்க்கத் தூண்டியது. இனியும் காலங்கடத்திக் கொண்டிருக்கக் கூடாது; வருவது வரட்டும், முயற்சிக்க வேண்டியதுதான் எனத் தீர்மானித்தேன்.

அந்தி மயங்கும் வேளைகளில், மந்தையிலிருந்து திரும்பும் மாடுகளில் வலது ஓரத்தில் முதன்மையாக வரும் மாட்டின் வலது கொம்பில் உட்கார்ந்து குறளி பவனி வரும் என்றும்; அதைப் பார்ப்பதற்கு, சதா கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் 'அழுகுணித் தேவாங்'கின் கண்ணீரை நம் கண்களில் தடவிக் கொண்டு பார்த்தால் தெரியும் என்றும்; அதைப் பிடிப்பதற்கு அப்படி அது வரும் வேளையில், தண்ணீர்க் கரையருகே, தேவாங்கை ஒரு இடத்தில் கட்டிப் போட்டு, முன்னால் ஒரு துணியில் பொரிகடலையைப் பரப்பி வைத்து, நம் கண்ணில் தேவாங்குக் கண்ணீரைத் தடவிக் கொண்டு தயாராகக் காத்திருக்க வேண்டும் என்றும் விவரங்கள் சேகரித் திருந்தேன். தேவாங்கையும், பொரிகடலையும் கண்டதும், மாட்டுக் கொம்பை விட்டு குறளி இறங்கி வரும்; கையிலுள்ள கழியை பக்கத்தில் வைத்துவிட்டுப் பொரிகடலையைக் கொரிக்கும்; அப்பொழுது திடீரெனப் பாய்ந்து அந்தக் கழியை எடுத்துக்கொண்டு ஜலத்தில் குதித்து கழுத்தளவு ஆழத்தில் நின்று கொள்ள வேண்டும். குறளிக்கு தண்ணீரைக் கண்டால் பயம். எனவே, கரையில் நின்று கோலைக் கொடுக்கும்படி கெஞ்சிக் கூத்தாடும். மனமிரங்கி மசி

திருச்சி திரு லோகநாதன்

நாடக மேடையில் நடித்து நற்கியாதி பெற்ற இவர் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் 'ராஜகுமாரி' படத்தில் காசினிமேல் நாங்கள்' என்ற பாடலையும் 'கஞ்ச'னில் 'பிச்சைக் காரன் ஆனேன்', 'அத்தை மகளே நில்லாய்', 'நீல வான் நிலவே,' முதலிய பாடல்களையும் 'அபிமன்யு'வில் 'புது வசந்தமாமே,' என்ற பாட்டையும் பாடியிருக்கிறார். 'அபிமன்யு'வில் சகாதேவனாக நடித்துமிருக்கிறார். திரைக்கு ஏற்ற தோற்றம், இனிமை ததும்பப்பாட ஏற்ற சாரீரம் இவருக்கு இருக்கிறது என்பது கலாரஸிகர்கள் உணர்ந்த உண்மை. சிக்கனச் செலவில் உயர்ந்த படம்எடுக்க விரும்பும் முதலாளிகள் ஆர்வமும், திறமையுமுள்ள இவர் போன்ற இளம் நடிகர்களுக்குநல்ல வேடங்கள் கொடுத்துநடிக்கச் செய்தால் லாபமுண்டு.

வெற்றிகரமாக நடைபெறுகிறது!

★ சிட்டாடல் ★

ஞான சௌந்தரி

மகாலிங்கம், ராஜம்மா

நடித்தது

(விநியோக உரிமை: தஞ்சை, திருச்சி ஜில்லா)

●

விரைவில் எதிர்பாருங்கள்

★ மரகதாவின் ★

பிழைக்கும் வழி

துரைராஜ், பாலையா, டி. ஏ. ஜயலக்ஷ்மி

நடித்தது

(விநியோக உரிமை: தஞ்சை, திருச்சி ஜில்லா)

●

கிருஷ்ண துலாபாரம் - நவீன வள்ளி

(விநியோக உரிமை: தஞ்சை, திருச்சி ஜில்லா)

புதிய படங்களை எதிர்பாருங்கள்!

விவரங்களுக்கு

மாலி பிக்சர்ஸ், திருச்சிராப்பள்ளி

ந்துவிடக் கூடாது. கரைக்கு வந்ததும் தன்னை ஒன்றும் செய்யக் கூடாது; தவிர தான் கூப்பிடும் போதெல்லாம் வந்து, கோரும் வேலைகளைச் செய்து முடிக்க உதவவேண்டும் எனச் சத்தியம் செய்து கொடுக்கச் சொல்ல வேண்டும். 'கழுவன் சாதனை, சாதிக்கும். ஏமாந்து விடக் கூடாது. கடைசியாக வேறு வழியின்றி 'அது சத்தியம் செய்து கொடுக்கும். இப்படியாகத் தானே அடிமையாகிவிடும் எனக் கேள்விப்பட்டிருந்தேன். சோதனை செய்வதென்ற முடிவுக்கு வந்தேன்.

பொரிகடலை வாங்கிவிடலாம். தேவாங்கு வாங்க வேண்டுமே? ரூபாய்க்கு என்ன செய்வது? யோசித்தேன். அம்மாவிடமும், பாட்டியிடமும் போய் பள்ளிக் கூடத்தில், லாபாரடரியில் ஒரு சாமானை உடைத்து விட்டேன், அதற்கு அபராதம் கட்ட வேண்டும் எனப் புளுகினேன். அழுது அடித்து அப்பாவிற்குத் தெரியாமல் பணம் சேகரித்தேன்.

கடைசியாக ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து, ஊருக்கு வடக்கே யுள்ள வாய்க்காலில், சாயங்கால வேளைகளில் அதிகமாக ஆள்நடமாட்டம் இருக்காத 'ஆணைக்கிடங்கு' என்ற பிரதேசத்தில், அரசமரத்தடியில் தேவாங்கைக் கட்டிப்போட்டு விட்டு காத்திருந்தேன். மலைவாயில் மறையும் சூரியனின் பொன்னிறக் கதிர்களை யேற்று அரசமரத்தின் தளிர் இலைகள் தகதகாய ஒளி சிதறின. கருப்பஞ்சாறு போன்ற ஜலம் வாய்க்காலின் இருகரையும் பொழிந்து ஓடிற்று. அந்த வாய்க்காலிலேயே சற்று ஆழமான இடம் ஆணைக்கிடங்குதான். எங்கள் ஊருக்கு வரும் சர்க்கஸ் யானைகளை அங்கேதான் குளிப்பாட்டுவார்கள். அதனால்தான் அந்தப் பெயர் வந்தது.

ஆச்சு. மாடுகள் வரும் சமயமாயிற்று. 'தயாராகத் தேவாங்கு கண்ணீரை எடுத்து கண் இமைகளில தேய்த்துக் கொண்டு நின்றேன். கண் கரித்தது. ஒரு விதப் பயம் இதயத்தைக் கவ்வவே கைகால்கள் வெட வெட வென நடுங்கத் தொடங்கின. மனதைத் திடப்படுத்த முயன்ற வண்ணம் நின்றேன். வரிசை வரிசையாக மாடுகள் வந்தன. முதல் வரிசையில் வலது கோடியில் முதலாவதாக வரும் மாட்டையே உன்னிப்பாகக் கவனித்தேன். ஒன்றும் தெரியவில்லை கொம்பைத் தவிர. கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டேன். உறுத்து உறுத்துப் பார்த்தேன். கண் நோவெடுத்ததுதான் மிச்சம். புத்தகம் எழுதிய பயல் ஏமாற்றி யிருக்கிறான், விவரம் சொன்ன ராஸ்கல்கள் புளுகியிருக்கிறார்கள் என்ற ஆத்திரம் வந்தது. சரியாகப் படித்துப் புரிந்து கொள்ளவில்லையோ, ஏதாவது பரிபாஷையில் எழுதப்பட்டு உள்ளர்த்தம் வேறு அடங்கியதாக இருக்குமோ என்ற சந்தேகம் ஒரு பக்கம். தேவாங்கைத் தூக்கி ஓடும் நீர்பரப்பில் எறியலாமா என்ற சீற்றம். இந்த நிலை சிறிது நேரம் நீடித்தது. பின்பு 'சட் தூத்தேறி' எனத் தேவாங்கை எட்டி உதைத்தேன். கொஞ்ச தூரம் தள்ளிப்போய் விழுந்து, எழுந்து, குறுகுறு வென உட்கார்ந்தது அது. சாதாரணமாகவே இரக்கம் எழுப்பும் அதன் தோற்றம் என் மனதில் வேதனையை விளைவித்தது. வாய்க்கால் கரையோரமாகவே வந்து வழக்கமாக நான் குளிக்கும் துறையை அடைந்தேன். குளிர்ந்த நீரில் முழுகினால் கொஞ்சம் நிம்மதி ஏற்படும் என எண்ணினேன். மேல்துண்டை உதறிப் படிக்கட்டில் போட்டுவிட்டு வாய்க்காலில் பாய்ந்தேன். படு சுகமாக இருந்தது. நீரில் திளைத்து நீஞ்சி விளையாடி பொழுது போவது தெரியாமலே இருந்தேன். கரு கரு வென இருள் எங்கும் பரந்தது.

பதினைந்து இருபது நிமிஷங்கள் கழித்திருக்கும். எழுந்து, கரைக்கு வந்து, தலை துவர்த்தி, துணிகளையெல்லாம் பிழிந்து கொண்டு புறப்படத் தயாரானேன், உள்ள ஏமாற்றத்தை இனிமையான ஸ்னானத்தால் சரி செய்ததில் ஒருவிதத் திருப்தி. அபத்த ஆசைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டோம் என்ற ஆனந்தம். படிக்கட்டு ஏறிக் கரைக்கு வந்ததும் எதிரே இரு உருவங்கள் வருவதைக் கண்டேன். முன்னால் வந்தது யாரோ தெரிந்த நபர் மாதிரி இருந்தது. யாராயிருக்கலாம் என்ற யோசனை. 'நான் கரையிலே நிற்கிறேன் சீக்கிரம் குளித்துவிட்டு வா', என்று அவ்வுருவம் பேசியதும். 'யாரது சுந்தரமா? இப்போ இங்கே எங்கு வந்தாய். அது யார்?' எனக் கேட்டேன். 'அடே நீயா? இது என்ன இது? அந்திக் குளிப்பு?' என அதிசயித்த அவன், 'அதோ! யாருன்னு தெரியணும்னு வீட்டில் போய் உலர்ந்த துணி உடுத்திக் கொண்டு சீக்கிரம் வீட்டுக்கு வா. வேடிக்கை பார்க்கலாம்,' என்றான்.

ஒரு விஷயம் மோசமானது, கேடு விளைவிக்கக்கூடியது எனத் தெரிந்து விலகப் பார்க்கிறோம். ஆனால் அல்ப ஆசைக்குத் தூபம் போட்டு அவற்றைப் பெரிதாக்கி நம்மை அடிமை கொள்ளச் செய்து, கெட்ட வழிகளிலே அவற்றின் உந்துதலால் துணிந்து முன்னேறச் செய்யும் சந்தர்ப்பங்கள் சோதனைகளாக வந்து சூழுகின்றன. தெளிந்த சிந்தனையும், மனத் தெம்பும் உள்ளவர்கள் தப்பித்து விடுகிறார்கள். இல்லாதவர்கள் துன்பத்தில் சிக்கி, போதாதகாலம், ஏழரை நாட்டான் பிடியில் இருந்து ஆட்டுவித்தான் என்றெல்லாம் புலம்புகிறார்கள். என்னையும் பிந்திய கோஷ்டியில் சேர்ப்பதற்குத் துணை செய்த சம்பவம்தான் சுந்தரத் வீட்டில் எனக்காகக் காத்திருந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

தீபாவளி வாழ்த்துக்கள்

தீபாவளி கொண்டாடும் சமயம், குடும்ப பாதுகாப்பையும் சிந்தனை செய்து, பிற்கால சுகவாழ்விற்கு திட்டம் வகுப்பீர்.

★

தேவைக் கேற்ப இன்ஷ்யூரன்ஸ் அளிப்பது

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி லிட்.,

(ஓங்கி வளர்ந்து வரும் தமிழர் ஸ்தாபனம்)

தலைமை ஆபீஸ்: **கோயமுத்தூர்.**

V. C. வெள்ளிங்கிரி கவுண்டர்,
சேர்மன்.

M. S. பழனியப்ப முதலியார், B.A.,
மானேஜிங் டைரக்டர்.

C. R. சிவசுப்ரமணியம், B.A.,
செக்ரெடரி.

சென்னைப்பட்டண கிளை ஆபீஸ்: **கிண்டி ரோடு, அடையார்.**

தீபாவளி வாழ்த்துக்கள்

உத்திரவாதமுள்ள

எங்கள் **K. R.** சில்

பவுன் நகைகளை வாங்கி

ஆனந்தமடையுங்கள்

•

கே. ஆர். & சன்ஸ்,

பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

என்ன.... எங்கே...... எப்போது...?

● வாஹினி பிக்சர்ஸ் 'யோகி வேமனா' வின் சென்னை நகர உரிமை ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ் வாங்கியிருக்கிறார்கள். 29-ந் தேதி முதல் சென்னை பிராட்வே, கெயிட்டி ஆகிய இரு தியேட்டர்களிலும் படம் வெற்றிகரமாக ஓடுகிறது. நாகையாவின் பக்திபரவசமான பாடல்களும், நடிப்பும், தாசி மோகனாங்கியாக வரும் ராஜம்மாவின் நடிப்பும் ரசிகர்கள் மனங் கவருபவையாக உள்ளனவாம். வாஹினி தயாரிப்பு. ஆதலால் இதர கலை அம்சங்களுக்கும் குறைவில்லை.

● ராயல் டாக்கீஸாரது 'சுதர்சன்' படப்பிடிப்பு கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் துரிதமாக நடைபெறுகிறது. சின்னப்பா, கண்ணாம்பா, யோகமங்களம் முதலியோர் நடிக்கும் இப்படத்தை சுந்தர்ராவ் நட்கர்னி டைரக்ட் செய்கிறார்.

● 'எம். யு. எ. வியின் 'கீத காந்தி' உன்னத நீதிகள் நிறைந்த படமாகத் தயாராகிறது. பி. எஸ். சரோஜா, டி. ஆர். ராமசந்திரன், பெரிய நாயகி நடிக்கும் படம் இது.

● ஜூபிடர் 'மோஹினி' இன்று முதல் பல முக்கிய நகரங்களில் தோன்றி ரஸிகர்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளப் போகிறாளாம்.

● திருச்சி, தஞ்சை ஜில்லாக்களுக்கு நல்ல படங்களை வாங்கி விநியோகித்து வரும் திருச்சி மாலி பிக்சர்ஸார் மரகதா பிக்சர்ஸின் 'பிழைக்கும் வழி'யை சமீபத்தில்வாங்கியிருக்கிறார்கள். துரைராஜ், பாலையா, சுவாமிநாதன், டி. எ. ஜெயலக்ஷ்மி, ராஜகாந்தம் ஆகியோர் திறமையுடன் நடித்திருக்கும் சிறந்த ஹாஸ்யப் படம் 'பிழைக்கும் வழி'.

● பத்மநாபா பிக்சர்ஸ் 'சந்திரவங்கா' (தெலுங்குப் படம்) பெரும்பாலும் முடிந்த மாதிரிதான். ஆந்திர நாட்டில் பிரபலமான கிராமியக் கதை. காஞ்சனா என்ற நடிகை திறமையாக நடித்திருக்கிறாராம். பட முதலாளி அனந்தராவே கதாநாயகனாகத் தோன்றுகிறாராம். ஜிதன் பானர்ஜி மேற்பார்வையில், காட்டூர் மோஹன் டைரக்ஷனில் உருவாகி முடிகிறது. ஸ்டுடியோ நியூடோன்.

● கிருஷ்ணா பிக்சர்ஸ் 'கிருஷ்ணபக்தி' ஷூட்டிங் எல்லாம் முடிந்துவிட்டது. இனி முடிவான 'எடிடிங்' ஆகி சென்ஸாராக வேண்டியதுதான். அழகிய நடனங்கள், இனிய கானம், உணர்ச்சி மிக்க நடிப்பு எல்லாம் அடங்கிய படமாக இருக்கும் இது.

● மாடர்ன் தியேட்டர்ஸ் 'ஆதித்தன் கனவு' சுவாரஸ்யமான கதையின் அடிப்படையில் அமைந்தது. மகாலிங்கம் தமது திறமை முழுவதையும் பயன்படுத்தி இனிமையாகப் பாடியிருக்கிறார். அஞ்சலிதேவி அவருக்குப் பொருத்தமான ஒரு வேஷம் எற்று நடித்திருக்கிறார். ஸெட்டிங் ஜோடனைகள் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவிற்குப் பெருமை தருவனவாக அமைந்துள்ளன.

'சிவாஜி ஆண்டுமலர்'

இலக்கிய நயம் மிக்க மலர்களை தயாரிப்பதில் புகழ்பெற்றவர் திருலோக சீதாராம். இப்பொழுதும் மலர் ஒன்றை தயாரித்துவெளியிட்டிருக்கிறார். பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன்' கொத்தமங்கலம் சுப்பு, ஸ்ரீரா, போன்ற சிறந்த எழுத்தாளர்கள் எழுதி யிருக்கிறார்கள். விலை ரூபாய் இரண்டு.

அன்பர்களுக்கு

தீபாவளி வாழ்த்துகள்

எஸ். கே. ராவ்,

(Ladies & Gents' Tailor)

ரெடிமெட் ஆடைகள்
தயாரிப்பாளர்,
விற்பனையாளர் :

38, ஒப்பணக்கார வீதி,

கோயம்புத்தூர்.

ஜூபிடர் 'மோஹி'னில்

Edited and Published by P. S. CHETTIAR, 53, General Patters Road, Madras—2.
Printed by Radhakrishna Chettiar, at The Royal Printing Works, 11-A, Mount Road, Madras.
—Associate Editor R. S. Gomathinayagam.

விரைவில் கண்டு மகிழலாம்
பல நட்சத்திரங்கள் மின்னும் இணையற்ற சித்திரம்
பி. யு. சின்னப்பா
ராஜகுமாரி
டி. பாலசுப்ரமண்யம்
கே. ஆர். ராமசாமி
பி. எஸ். ஜெயராமன்
என். எஸ். கிருஷ்ணன்
புளிமூட்டை
தனலக்ஷ்மி
பி. ஏ. பெரியநாயகி
ஏ ஆர். சகுந்தலா
டி. ஏ. மதுரம்
வி. டி. ராஜகாந்தம்
நடிக்கும்
கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R.S.மணி
கிருஷ்ண பிக்சர்ஸ்
சென்னை.17.
ஸ்டூடியோ: நியூடோன்
VENDHAI

Regd. NO M 3515

Wrapper printed at Papa Press, Madras 2.